திருகோணமலை
தொ.பே.இல. 077-2637414



மாங்கல்ய பாக்கியம் திருமணசேவை
திருக்கோணமலை




தொடர்பு :
e-mail : trincomalee50@gmail.com
web : www.mankalyapakkyam.tK

மார்கழி மாதம் 8ம் திகதி
December 23, 2012

# மலைமுரசு®

அறைவு 01 இயம் 22
MALAIMURASU

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை – 20.00 பக்கங்கள் – 10 பிரதி ஞாயிறு தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

## இந்தியாவின் பிடி நழுவச் சீனா உள் நுழையுமா?

# சம்பூர் அனல்மின் நிலையப் பணிகள் இழுபறியில்!

## இந்தியச் செலவு மதிப்பீடுகளில் இலங்கை மின்சார சபை மீளாய்வைக் கோருகின்றது.

தொடர்ச்சி 7ம் பக்கத்தில்

### நிரந்தர நியமனம் பெறவுள்ள கிழக்கின் பட்டதாரிகள்

கிழக்கு மாகாண சபையினால் பயிலுனர் பட்டதாரிகளாக அரச சேவைக்குச் சேர்க்கப்பட்டவர்களுக்கான அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் 30.06.2012 ஆம் திகதி நடாத்தப்பட்ட போட்டிப்பரீட்சையின் அடிப்படையிலும் நேர்முகத்தேர்வின் அடிப்படையிலும் வழங்கப்படவுள்ளன. 384 பட்டதாரிகளுக்கே திருமலை மாவட்டத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கான புதிய நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

(7ம் பக்கம் பார்க்க)

### இலண்டனில் தயாராகின்றது ஈழத்து எழுத்தாளர் விபரத் திரட்டு

ஈழத்து எழுத்தாளர்களின் விபரங்கள் அடங்கிய நூலொன்றை தயாரிக்கும் முனைப்புக்கள் இலண்டனில் உள்ள திரு. ஆர். மகேந்திரன் அவர்கள் மேற்கொண்டுள்ளதாக மலைமுரசிற்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

ஈழத்து எழுத்தாளர்கள் தங்களது பெயர், புனைபெயர், பிறந்த இடம், கல்வித் தகைமை, தொழில், ஆக்கங்கள் வெளிவந்த பிரசுரங்கள், பதிப்பித்த நூல்கள், முகவரி, கிடைத்த விருதுகள்

(7ம் பக்கம் பார்க்க)

### பணியைப் புறக்கணித்தனர் பேரூந்து ஊழியர்கள்

தனியார் பேரூந்துக்காரர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களால் தாக்குதல் நடத்தப்படுவதற்கு ஆட்சேபம் தெரிவித்து திருகோணமலை இ.போ.ச ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பு போராட்டத்தில் கடந்த 18.12.2012 அன்று ஈடுபட்டார்கள்.

கடந்த சில வாரங்களாக திருகோணமலைக்கும் தங்காலைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் பேரூந்து வண்டிகள் மீது மெல்சிறிபுர, அளுத்தோயா,

(7ம் பக்கம் பார்க்க)

### சிவில் பாதுகாப்பு அலுவலரின் கை வெட்டப்பட்டது

பன்குளம் காவல்த்துறைப் பிரிவுக்கு உட்பட்ட பெரியவிளான் குளப் பிரதேசத்தில் (மகாதிவுள்வெவ) சிவில் பாதுகாப்பு அலுவலர் ஒருவரின் கை கத்தி வெட்டுக்கு இலக்காகியுள்ளது.

தனிப்பட்ட தகராறு காரணமாகவே இக் கத்திவெட்டுச் சம்பவம் நிகழ்ந்திருக்க வேண்டும் எனத் தெரியவருகின்றது.

வலதுகையில் காயமடைந்த சிவில் பாதுகாப்பு அலுவலர்

(7ம் பக்கம் பார்க்க)

### குர்ஆன் மத்ரசாவிற்குப் புதிய கட்டடம்

திருக்கோணமலை நகர நூறுல் ஹிதாய குர்ஆன் மத்ரஸாவின் புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு 14.12.2012 வெள்ளிக்கிழமை அன்று நூறுல் ஹிதாய நிறுவனஅமைப்பின் (Noorul Hidhaaya Foundation) தலைமையில் நடைபெற்றது. இந்த கட்டிடத்திற்கான ஆரம்ப நிகழ்வை திருக்கோணமலை மஸ்ஜிதுல் ஆளி ஜும்மா பள்ளிவாயலின் இமாம் மௌலவி A.R.பரீட் (நஜ்மி) அவர்கள் ஆரம்பித்து வைத்தார்.

மூன்று மாடிகளைக் கொண்டதாக அமையவிருக்கும் இக் கட்டிடம்,

(7ம் பக்கம் பார்க்க)

### - வெள்ளம் வர முன் அணை கட்டுங்கள் - கிழக்கின் முதலமைச்சர்

வெள்ளப்பெருக்குத் தொடர்பாக முன் ஆயத்தத்துடன் செயற்படுமாறு கிழக்கு முதலமைச்சர் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் சமூக சேவை அதிகாரிகள் ஆகியோருக்கு பணிப்புரையொன்றை விடுத்துள்ளார்.

இப் பணிப்புரையில் இம்மழை தொடரும் பட்சத்தில் போக்குவரத்துத் துண்டிப்பு, மக்கள் இடம்பெயர்வு போன்ற இன்னல்கள் ஏற்பட வாய்ப்பள்ளது. இதனால் மக்களுக்கான உணவு உள்ளிட்ட இதர தேவைகளையும் வழங்கத் தயாரான நிலையில்

(7ம் பக்கம் பார்க்க)

### வாகை மர முறிவில் வகையாகச் சிக்கினார் இளைஞர்

நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக கடந்த செவ்வாய்கிழமையன்று (18.12.2012) இரவு 08.25 மணியளவில் திருகோணமலை பிரதான போலீஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள நீதவான் தங்குமிட விடுதியின் உள்ளே வளர்ந்திருந்த பெரிய வாகை மரம் ஒன்று பிரதான வீதியின் குறுக்கே முறிந்து விழுந்தது. அந்த வழியாக மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த 32 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் அதனுள் சிக்கிக்கொண்டார். இடர் அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகளின் நீண்ட நேர போராட்டத்தின் பின் பலத்த காயங்களோடு மீட்கப்பட்ட அந்த இளைஞர் மருத்துவ பரிசோதனைக்காக

(7ம் பக்கம் பார்க்க)

**கடந்த வாரம் ஏற்பட்ட மின் துண்டிப்பால் 16.12.2012ல் தரிசனம் அலைவரிசை இடைநிறுத்தப் பட்டிருந்தமைக்கு வருந்துகின்றோம்**

### இன்று தரிசனம்

அலைவரிசையில்

**வணக்கம் தரிசனத்தில்:**

அருட்பணி வணபிதா.நிதிதாசன் அடிகளுடன் நேர்காணல்

**தரிசனத்தின் நத்தார் செய்தி**

**தரிசனத்தின் நத்தார் கரோல் பாடல்கள்**

**சண்முக வித்தியாலய பழைய மாணவிகளின் கதம்ப மாலை**

**திருமலைக் கலைஞர்கள் கலக்கும் நகைச்சுவைத் தொடர் நாடகம் - வாத்தியும் வைத்தியும்**

**குட்டீஸ் சிறார்களின் கலைநிகழ்வு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம் !

### தவறான முன்னுதாரணத்தில் சாதாரண தர மாணவர்கள்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையின் இறுதிப் பரீட்சை நிறைவுற்ற 20.12.2012ன் மதிய நேரம் திருமலை நகரின் தெருக்கள் முழுவதும் மாணவர்கள் தமது நிறங்களை மாற்றும் பெரு முயற்சியில் ஈடுபட்டதைக் காணமுடிந்தது. புரியவில்லையா!

வெள்ளை நிற உடைகளின் மீது நீல நிறத்தைத் தெளிக்க முயன்று கொண்டிருந்தனர். தம்மீதும் ஏனையோர் மீதும் பகிடி யாக அதைத் தெளித்துத் தமது பரீட்சை முடிவுகளைக் கொண்டாடினர் என்பதை நாங்கள் காண முடிந்தது.

இந்த மனநிலையின் முடிவு எது என்பதைப் புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். தனது இன்பத்திற்காக மற்றையவர் மீது கரி பூச நினைக்கும் மனோ நிலையின் நீண்ட காலத் தாக்கம் எதுவாயிருக்கும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?

அத்தாக்கம் எமது சமூகத்தின் மீது மிகப் பெரும் பாதிப்பைப் பல்வேறு வடிவங்களில் உருவாக்கிக் கொண்டு வருகின்றது. அதன் ஒரு வடிவமே பல்கலைக்கழகங்களில் பகிடிவதை என்னும் பெயரில் உருவாகும் மனித மனச் சிதைவு ஆகும்.

அண்மையில் வாசித்த உளவியல் சஞ்சிகையொன்றில் மனித மனத்தின் அடிப்படையில் புதையுண்டு கிடக்கும் மிருக உணர்வுகளின் வெளிப்பாடே மற்றைய மனிதரை வதைக்குள்ளாக்கி அதில் அடையும் மகிழ்ச்சி எனக் குறிப்பிடப் பட்டிருந்தது.

நாம் ஒருவரைத் தடியால் அடித்து தண்டனை வழங்கும் போது முதலாவது அடி அடிக்கும் போது மனிதனாக இருக்கின்றோம் என்றும் அந்த அடியை வாங்கிக் கொண்ட மனிதன் படும் பாட்டைக் கண்ணுறும் எமக்குள் இருக்கும் மிருகம் விழித்துக் கொள்ளும் போது இரண்டாவது அடியிலிருந்து நாங்கள் மெல்ல மெல்ல மிருகமாக மாறத் தொடங்கிவிடுவோம் என்றும் புரிந்துகொள்ள முடிந்தது.

குழந்தைகளை மிருக உணர்வை இரசிக்க வைப்பதற்குத் தயாராக்கும் முதற்படி நிலையாகவே இந்த க.பொ.த சாதாரண தர விளையாட்டு எனக்குத் தெரிகின்றது.

எனில் இந்த நிலையைத் தடுப்பது எப்படி என்பதை நாம் இங்கு சிந்திக்க வேண்டும். 20.12.2012ல் சில மாணவர்களைக் காவலத்துறை அதிகாரிகள் கலைத்துச் செல்வதை நான் கண்டேன். இது தவறானதொரு ஆரம்பம் என்றே எனக்குப் பட்டது. காவல்த்துறையினரைக் கொண்டு இவ்விடயத்தைக் கையாளாமல் பெற்றோர்கள் அனைவரும் திரண்டால் இந்த மிருக உணர்வூற்றின் மூலத்தை அழித்துவிட முடியும்.

பரீட்சையின் இறுதி நாளில் தமது குழந்தைகளை அழைத்துச் செல்ல அனைத்துப் பெற்றோரும் அந்த பாடசாலைக்கு முன் திரண்டால் எந்தக் குழந்தையாலும் நிறம் மாறவோ நிறம் மாற்றவோ முடியாது போய்விடும். குழந்தைகளின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு தானே பாடசாலைக்கு அனுப்புகின்றோம். ஆகவே எம் இனிய பெற்றோரே அடுத்த ஆண்டிலாவது பரீட்சை இறுதி நாளில் பாடசாலையின் முன் திரள்வோமா?

## - வருந்துகின்றேன்-

கடந்த வாரம் 7ம் பக்கத்தில் வெளியான செய்திகள் இரண்டின் தலைப்புக்கள் தலைகீழாக மாறிக் கிடந்துள்ளன. அவ்விரு செய்திகளும் முறையே திரு. நந்தன் மாஸ்டர் அவர்களின் செய்தியும், ஒரு வழிப்பாதையாக மாற்றப்பட்ட சில பெருந்தெருக்களின் செய்தியுமாகும்.

எம்மிடமுள்ள எழுத்து வடிவம் எமது அச்சகத்தாரிடம் இல்லாமற் போனமையாலேயே இந்தத் தவறு நிகழ்ந்துள்ளது.

தயவு செய்து இத் தவறைப் பொறுத்தருளுமாறு வாசகர்களையும், திரு. நந்தன் மாஸ்டர் அவர்களையும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

-ஆசிரியர்-

## சுற்றுலா வந்தனர் உளவியற் குழப்பம் அடைந்த பெண்கள்



இலங்கை இராணுவத்தில் அண்மையில் இணைத்துக் கொள்ளப்பட்ட கிளிநொச்சியைச் சேர்ந்த தமிழ்ப் பெண்கள் மத்தியில் கடந்தவாரம் ஏற்பட்ட திடீர் உளவியல் குழப்பத்தை அடுத்து அவர்கள் திருகோணமலைக்கு சுற்றுலா அழைத்து வரப்பட்டனர்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள இலங்கை இராணுவத்தின் ஆறாவது மகளிர் படையணி முகாமில் இருந்த 16 தமிழ்ப்பெண் பயிலுனர்கள் கடந்த 11ம் நாள் நள்ளிரவு திடீரென உளவியல் குழப்பத்துக்கு உள்ளாகினர்.

இதையடுத்து இலங்கை இராணுவப் படையினரால் நள்ளிரவில் கிளிநொச்சி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு தனியான அறையில் வைத்து சிகிச்சையளிக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பாக கடும் சர்ச்சைகள் எழுந்த நிலையில், அவர்கள் மீண்டும் ஆறாவது மகளிர் படையணி முகாமிற்கே கொண்டு செல்லப்பட்டனர்.

தொடர்ந்து அவர்களை இலங்கை படை முகாமில் தங்க வைத்திருப்பது மீண்டும் உளவியல் குழப்பத்தை ஏற்படுத்தலாம் என்ற மருத்துவ கலாநிதி சிவதாஸ் அவர்களின் கருத்திற்கிணங்க கடந்த 13 மற்றும் 14ம் திகதிகளில் மனக்குழப்பமடைந்த பெண்கள் திருகோணமலைக்கு சுற்றுலா அழைத்து வரப்பட்டனர்.

திருகோணமலையில் பிரெட்றிக் கோட்டை, திருக்கோணேசர் கோவில், கிண்ணியா, நிலாவெளி கடற்கரை, கன்னியா வெந்நீரூற்று போன்ற இடங்களுக்கு இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். இலங்கை இராணுவத்தின் மகளிர் படைப்பிரிவில் இணைத்துக் கொள்ளப்பட்ட 103 தமிழ்ப்பெண்களில் 96 பேர் மட்டுமே இந்தச் சுற்றுலாவுக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். அழைத்து வரப்படாத ஏழு பெண்களில் 3 பேர் க.பொ.த சாதாரணதரத் தேர்வு எழுதுவதாலும், மற்றைய நான்கு பெண்கள் இன்னமும் முழுமையாக குணமடையாததாலும் இந்தச் சுற்றுலாவில் அவர்கள் பங்கேற்கவில்லை மருத்துவ கலாநிதி சிவதாஸ் தமிழ்ப் பெண் படையினர் அனைவரும், உளவியல் பாதிப்புகளுக்கே உள்ளானதாக தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

(சுதன்)



## உவர்மலை விவேகானந்தாவின் அதிபராக திரு. மதியழகன்"

திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரிக்கு புதிய அதிபராக சீ.மதியழகன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தனது கடமைகளை புதன்கிழமை 19.12.2012 மாலை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஏ.புஸ்பகுமார வினால் உடனடியாக செயற்படும் வண்ணம் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

சி.மதியழகன் முன்னர் நிலாவெளி தமிழ் மகா வித்தியாலயத்தில் அதிபராகவும், பின்னர் கிழக்கு மாகாண கல்வி திணைக்களத்தில் ஆரம்ப பிரிவுக்கு பொறுப்பான உதவிக் கல்வி பணிப்பாளராகவும். பின்னர் பெருந்தெரு விக்நேஸ்வரா மகா வித்தியாலயத்தில் அதிபர் இராஜநாதனின் ஓய்வுக்கு பின்னர் அதிபராகவும் கடமை யாற்றியவராவார்.

(கதிரவன், எஸ்எஸ்)

## வெள்ளத்தால் மூழ்கின கிராமங்கள்

இலங்கையில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக திருக்கோணமலையில் ஜமாலியா, ஜின்னாநகர், அலஸ்தோட்டம், புளியங்குளம் சாம்பல்தீவு சல்லி, இழுப்பங்குளம் பெரியகுளம், இக்பால் நகர், லிங்கநகர், கிண்ணியா, மூதூர், தோப்பூர், கிளிவெட்டி போன்ற பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின. கடந்த ஐந்து நாட்களாக பலத்த காற்றுடன் கன மழை பெய்து வருகிறது. மக்களின் வழமையான இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

SS Digital's
Printers for all requirements

புதுவருட வாழ்த்துகள்

## விளையாட்டு உபகரணங்களை வழங்கினார் மாகாண சபை உறுப்பினர்

குச்சவெளிப் பிரதேசத்திலுள்ள விளையாட்டுக் கழகங்கள் சிலவற்றிற்கு தனக்கென ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து விளையாட்டு உபகரணங்களை வழங்கியுள்ளார் மாகாண சபை உறுப்பினர் திரு. அன்வர் அவர்கள்.

2012ம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டின் ஊடாகத் தனக்குக் கிடைத்த அரச நிதியிலிருந்து விளையாட்டு உபகரணங்களை அன்வர் வழங்கிய நிகழ்வில் குச்சவெளி பிரதேசச் செயலாளர், உதவிச் செயலாளர், மற்றும் பிரதேசச் செயலக அலுவலர்கள் உட்பட உதவிகளைப் பெற்றுக்கொண்ட விளையாட்டுக் கழக உறுப்பினர்களும் பங்கேற்றனர்.



## கணவனை இழந்த பெண்களின் உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் (நெப்சோ) மகளிர் பிரிவின் ஏற்பாட்டில் மகளிர் சம்மேளனம் ஒன்று அண்மையில் திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது. மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு நடந்த இந் நிகழ்வில் கணவரை இழந்த பெண்கள். அரசியல். சமூக மற்றும் பொருளாதார ரீதியில் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். இப் பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுக்கொடுத்து இவர்களும் இவர்களின் பிள்ளைகளும் கௌரவமானதொரு வாழ்க்கையை சமூகத்தில் ஏற்படுத்திக்கொள்ள அரசாங்கமும் அரச சார்பற்ற நிறுவனங்களும் அரசியல் தலைமைகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேற்படி இயக்கத்தின் மகளிர் பிரிவு இணைப்பாளர் லவீனா ஹசந்தி தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து உரையாற் . பிரதியமைச்சர் சுசந்த புஞ்சிநில யின் செயலாளர் சிந்தக்க விஜேவர்தன. மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டில் இடம்பெறும் திவிநெகுமவின் ஊடாக இப்பெபெண்கள் அனைவரதும் குறைபாடுகள் தீர்த்து வைக்கப்படும் என்றும் உறுதியளித்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை ஆட்டிப் படைக்கும் மழையும் வெள்ளமும்

கடும் வெள்ள அபாயத்தை எதிர்கொண்டுள்ள இலங்கைத் தீவில் தற்போதுவரை 25 மக்கள் மழையினால் கொல்லப்பட்டுள்ளமை உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. மேலும் 36 நபர்கள் தற்போது வரை காணாமற் போயுள்ளதாகவும் தெரிய வருகின்றது. மண்சரிவினாலேயே பெருமளவு மரணங்கள் நிகழ்ந்துள்ளதாக அனர்த்த முகாமைப் பிரிவன் செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது. மேலும் அச் செய்திக் குறிப்பில் சுமார் 265,000 மக்கள் வெள்ளத்தினால் தமது வீடுகளுக்குள் முடக்கப்பட்டுள்ளதாகவும் 18,845 மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி 102 நிவாரண முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளதாகவும் குறிப்பிடுகின்றது. மாத்தளை மாவட்டத்திலேயே மக்கள் பெருமளவில் நிவாரண முகாம்களுக்குள் பேணப்படுவதாகவும் அம் மாவட்டமே நிலச்சரிவினை எதிர்கொள்ளும் ஆபத்தை அதிகமாக எதிர்கொள்ளும் மாவட்டமாக பிரகடனப் படுத்தப் பட்டுள்ளதாகவும் செய்திக்குறிப்பு மேலும் தெரிவிக்கின்றது.

சிலாபத்தில் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற ஐந்து மீனவர்கள் காணாமற் போயுள்ளனர்.

தொடருந்துச் சேவைகள் பெருமளவில் இடைநிறுத்தப் பட்டுள்ளதாக அத் திணைக்களம் தெரிவித்துள்ளது.





# கடற்படை முகாமிற்குள் அத்துமீறி நுழைந்தது யானை

கடந்த 13.12.2012 அன்று திருகோணமலையில் கிழக்கு கடற்படை முகாமிற்குள் காட்டு யானையொன்று புகுந்ததை அடுத்து . யானையைப் பிடிப்பதற்கான முயற்சியில் கடற் படையினரும் வனசீவராசிப் பாதுகாப்பு பிரிவு அதிகாரிகளும் ஈடுபட்டனர் .

கடலைக் கடந்து குறித்த முகாமிற்குள் புகுந்த யானை கடற் படை முகாமை அல்லோலகல்லோல படுத்தி விட்டது.

அதன் பிறகு யானையை கண்டு பிடித்த வனசீவராசிப் பாதுகாப்பு பிரிவு அதிகாரி எம்.சுரேஸ்குமார் தலைமையிலான குழு அதனை காட்டுக்குள் விடுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றி அடைந்தனர்.



# திருமலை ஊடகவியலாளர் சங்கத்தினர் கிழக்கின் முதலமைச்சரைச் சந்தித்தனர்

திருமலை ஊடகவியலாளர் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் கிழக்கு மாகாண முதலமைச்சர் கௌரவ நஜீப் அப்துல் மஜீத் அவர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த 14.12.2012ல் நடைபெற்றுள்ளது.

திருமலை ஊடகவியலாளர் சங்கப் பிரதிநிதிகளை முதலமைச்சரின் அலுவலகத்தில் சந்தித்த முதலமைச்சர் அவர்களுடனான கலந்துரையாடலில் ஊடகவியலாளருக்கான நலன்புரிச் சேவைகள் தொடர்பாகப் பிரதானமாகக் கலந்துரையாடியதுடன் திருமலை ஊடகவியலாளர் சங்கத்தின் 10வது ஆண்டுப் பொதுக்கூட்டம் தொடர்பாகவும் ஆராய்ந்துள்ளார்.







# வரலாற்று உருவாக்கக் கால திருகோணமலை.




ஒரு இனம் அல்லது ஒரு இடத்தின் வரலாற்று காலம் என்பது அவ் இனத்தின் அல்லது அவ் இடத்தில் வாழ்ந்த மக்களால் அல்லது வருகை தந்த மக்களால் தங்களது வாழ்வியல் தொடர்பாக ஏதோ வகையில் பதியப்பட்டு இருந்தால் அக்காலம் வரலாற்று காலம் என அழைக்கப்படுகிறது.

திருகோணமலையின் வரலாற்றுக் காலம் எங்கு தொடங்குகிறது என்பது தொடர்பில் வரலாற்று ஆய்வாளர்களிடையே முரண்பாடுகள் இருக்கலாம் அல்லது சில வேளை அவர்கள் அதை சிந்திக்காமல் இருக்கலாம்.

ஆனால் திருகோணமலை வரலாற்றுக் காலம் என்பது அது வியாபார மையமாக உருவானதில் இருந்து தொடங்குகிறது எனக் கூறுவதே பொருத்தமானது. தற்போதைய திருகோணமலை சர்வேதேச வியாபார துறைமுகமாக இருப்பதற்கு மிகமுக்கிய காரணம் திருகோணமலை ஒரு இயற்கை துறைமுகம் ஆக இருப்பதே. ஆனால் அக்காலத்தில் ஏன் திருகோணமலை சர்வேதேச வர்த்தகத் துறைமுகமாக இருந்தது?

நம் எல்லோரின் பதிலும் இயற்கைத் துறைமுகம் என்ற ஒரு தெரிவை கொண்டிருக்கும். ஆனால் அந்த காரணம் மட்டும் நிச்சயம் இல்லை ஏனென்றால் அக்காலத்தில் சர்வேதேச வியாபாரத்தில் தற்போது உள்ளவாறு பாரிய கப்பல்கள் பயன்படுத்தப் படவில்லை கடற்கலங்கள் மட்டுமே பயன் படுத்தப்பட்டன. அவைகள் கரைகளுக்கு கொண்டு செல்ல கூடியதாக வடிவமைக்க பட்டு இருந்தன. இதனால் ஆழம் குறைந்த பகுதிகளிலும் அக் கடற் கலங்கள் பயணிக்க கூடியதாக இருக்கும். இதன் காரணமாக இயற்கைத் துறைமுகமோ அல்லாது [illegible] அமைப்போ [illegible] இல்லை. இவ்வாறன கடற் கலங்களை





நிறுத்த கடற்கரையில் உள்ள சிறு இறங்கு துறைகளே போதுமானவை. ஆனால் திருகோணமலை என்பது காற்றை சக்தியாக கொண்டு இயங்கி கிழக்காசிய நாடுகளில் வர்த்தகத்தில் ஈடுபடும் கடற்கலங்களுக்கு மிகமுக்கியமான தலம். ஏன் என்றால் பருவக்காற்று கிழக்காசிய நாடுகளுக்கும் இலங்கையில் கிழக்கு பகுதி நோக்கியும் வீசுவதால் திருகோணமலையும் அதனை அண்டிய பகுதிகளும் வியாபாரிகளின் புழக்கத்திற்கு உள்ளாகின. இதுவரை உள்ள வரலாற்று நூல்களில் திருமலையில் உள்ள இரண்டு முக்கிய இடங்கள் துறைமுகங்களாக அடையாளப்படுத்தப்படுகிறன. இன்று சுற்றுலாத் தலங்கள் ஆகிப்போன லங்காப் பட்டினம் என்று அழைக்கப்படும் இலங்கைத்துறைமுகத்துவாரம் மற்றும் கோகர்ணம் ஆகியனவே அவை.

இவ்விரண்டு துறைமுகங்களுக்கு அண்மித்த பகுதிகள் திருமலையின் வரலாற்று தொடக்ககாலம் தொடர்பான பல கல்வெட்டு ஆதாரங்களை கொண்டு காணப்படுகின்றன . எதிர்வரும் வாரங்களில் ஒவ்வொரு துறைமுக பிரதேசம் தொடர்பாகவும் அதனை அண்டிய பகுதிகளில் உள்ள வரலாற்று தடயங்கள் தொடர்பாகவும் தொடர்ந்து விரிவாக ............... நடுவோம்....

கா .செந்தூரன்

திரியாயில் உள்ள் வியாபாரிகள் தங்குமிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு 23.12.2012

# 13வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாண சபைகளின் சட்டவாக்க அதிகாரம்

உ.பிரஷான்டினி
சட்டத்துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

ஒரு நாட்டினைப் பொருத்தவரை அதன் அரசியலமைப்புச் சாசனமே அதன் அனைத்து அதிகாரங்களையும் வழங்குவதாகவும், கட்டுப்படுத்துவதாகவும் விளங்குகின்றன. இவை காலத்திற்கு காலம் பல்வேறுபட்ட மாற்றங்களையும், திருத்தங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளன. அந்தவகையில் இலங்கையில் இதுவரை 18 திருத்தச்சட்டங்கள் இடம்பெற்றுள்ளன. எமது அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த காலம் தொடக்கம் இன்றுவரை அதிகாரபரவலாக்கம் என்ற பதம் அனைவரும் அறிந்ததே. எமது நாட்டின் சட்டவாக்க அதிகாரம் பாராளுமன்றத்திடமே பாரப்படுத்தப்பட்டுள்ளது. அவை தொடர்பான ஏற்பாடுகளையே அரசியலமைப்பும் வழங்குகின்றது. இதனடிப்படையில் 1987ம் ஆண்டு இந்திய தலையீட்டின் காரணமாக 13வது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டது. இதில் அரசின் பல அதிகாரங்களை மாகாணசபைகளை தாபித்து அவற்றுக்கு வழங்குவதாக ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன. ஏட்டுவடிவில் தெளிவாக்கப்பட்டுள்ள இவை நடைமுறையில் முறையான செயற்படுதலை கொண்டுள்ளதா என்பது கேள்விக்குரிய தொன்றாகும். அத்தோடு இதிலுள்ள சில மட்டுப்பாடுகள் வழங்கிய அதிகாரங்களை கட்டுப்படுத்தும் போக்குடையதாக விளங்குகின்றன. நமது நடைமுறை யாப்பிலேயுள்ள எந்தவொரு உறுப்புரையும் அதிகாரப் பரவலாக்கம் பற்றி வெளிப்படையாக கூறாவிடினும் உறுப்புரை(Art)- 27(4) இது பற்றிய சிறிய வெளிப்படுத்தலாக அமைந்துள்ளது. யாப்பிலேயுள்ள சில உறுப்புரைகள் மூலமாக் எமது பாராளுமன்றமே சட்டவாக்க அதிகாரத்தை முழுமையாக கொண்டுள்ளது என்பதை அறிந்துகொள்ளலாம்Art-75. (Art-3:நாட்டின் இறைமை மக்களிடமேயுள்ளது, Art-4(a):மக்கள் தம் சட்டவாக்க இறைமையை பாராளுமன்றம் ஊடாக பிரயோகிக்கின்றனர்). இவ்வாறான வெளிப்படுத்தல்கள் எவையும் முன்னைய யாப்புகளில் ஏற்பாடு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சட்டமானது பாராளுமன்றால் தனியாக, அல்லது மக்கள் பொதுவாக்கெடுப்புடன் இணைந்து, அல்லது மக்கள் பொதுவாக்கெடுப்புடன் மட்டும் சட்டமாக நிறைவேற்றப்படலாம்.

13வது திருத்தத்தின் மூலம் நாடுமுழுவதும் உள்ளடக்கி 9 மாகாணசபைகள் தாபிக்கப்பட்டுள்ளன. இவற்றின் அதிகாரங்கள், தேசியரசின் அதிகாரங்கள், இரண்டுக்கும் பொதுவான அதிகாரங்கள் போன்றவை முறையே மாகாணசபை நிரல், ஒதுக்கிய நிரல், ஒருங்கிணை நிரல் மூலமாக நிரற்படுத்தப்பட்டுள்ளன. அந்தவகையில் மாகணசபைகளுக்குள்ள சட்டவாக்க அதிகாரங்கள் எந்தவகையில் காணப்படுகின்றன என்பதையும், பாராளுமன்ற சட்டவாக்கவதிகாரங்களின் சிறப்புரிமைகள் பற்றியும் சில தலைப்புக்களின் கீழ் நோக்கமுடியும். பாராளுமன்றால் இயற்றப்படுபவை 'சட்டங்கள்'(LAW) என்றும் மாகாணசபைகளால் இயற்றப்படுபவை 'நியதிச்சட்டங்கள்' (STATUTES) என்றும் அழைக்கப்படுகின்றன. சட்டமானது சாதாரண பெரும்பாண்மையுடன், அல்லது விஷேட பெரும்பாண்மையுடன் பாராளுமன்றில் நிறைவேற்றப்படலாம்.

மன்றானது மக்களின் ஒபபுதலுடன் எவ்வகையான திருத்தங்களையும், மாற்றங்களையும் (சட்டவாக்கம் உட்பட) மேற்கொள்ள முடியும்.

## மாகாணசபைகளைக் காட்டிலும் பாராளுமன்றச் சட்டங்களின் சிறப்புரிமைகள்

13வது திருத்தச்சட்டத்தில் பரவலாக்கப்பட்ட அதிகாரங்கள் பாராளுமன்றின் இறைமையை பாதிக்கவல்லன என்ற பல விமர்சனங்கள் தோன்றின. அத்தகைய விமர்சனங்கள் பல்வேறுபட்ட வழக்குகள் மூலமாக தீர்க்கப்பட்டன. இதன்படி இங்கு சட்டங்களை உருவாக்க வழங்கப்பட்ட வழிமுறைகள் ஒரு செயல்முறை கட்டுப்பாடுகளே தவிர பாராளுமன்றின் அதிகாரத்தை, இறைமையை பாதிக்கவல்லன அல்ல. இதில் உறுப்புரை 154G(1) மாகாணசபை நியதிச்சட்டங்களை இயற்றுவதற்கான வாய்ப்பை வழங்குகின்றன. ஆயினும் இது அரசியலமைப்பிற்கு [Art-75,154G(10)] உட்பட்டவையாகும். உறுப்புரை 170 இலுள்ள 'சட்டம்' என்பதன் பொருள்கோடலின் படி 1978ம் ஆண்டு யாப்பு நடைமுறைக்கு வருவதற்கு முன்பு பாராளுமன்றால் உருவாக்கப்பட்டவையும் ஏனைய சட்டவாக்க அந்தஸ்து பெற்றவையால் உருவாக்கப்பட்டவையுமே சட்டம் என்ற தன்மை பெறும் ஏனையவையல்ல எனவே நியதிச்சட்டங்கள் சட்டஅந்தஸ்து அற்றவையாகும்.

உறுப்புரை 80(3) பாராளுமன்றால் இயற்றப்படும் எந்தவொறு சட்டமும் நீதிமன்றின் கேள்விக்குட்படுத்தப்பட முடியாது என்ற சிறப்புரிமை பெற்றவை இது நியதிச்சட்டங்களுக்கு கிடையாது. அத்தோடு சட்டமானது மசோதாவாக உள்ள நிலையில் மட்டுமே குறிப்பிட்ட காலப்பகுதியில் நீதிமன்றால் அதன் வலிதை பரிசீலணை அல்லது மீளாய்வு செய்யமுடியும். இத்தகைய கால வரையறை நியதிச்சட்டங்களுக்கு இல்லை அவை எக்காலத்திலும் (வருடங்கள் கடந்த நிலையிலும்) மீளாய்வுக்குட் படுத்தப்படலாம். நியதிச்சட்டங்கள் அதிகார வரம்பிற்கு மீறியவையாக(ultra virus) காணப்படும் போது அரசியலமைப்பின் படி வெற்றானதும், வறிதானதாகவும் கருதப்படும். ஆனால் சட்டங்கள் இவ்வாறிருப்பின் சில காலங்கள் கழிந்த பின் சட்ட அந்தஸ்தைப் பெற்றுவிடும். இவ்வாறாக ஒரு வலிதற்ற நிலையில் நியதிச்சட்டங்கள் காணப்படுகின்றன.

## நியதிச்சட்ட அந்தஸ்தைப் பெறமுன்னுள்ள கட்டுப்பாடுகள்

உறுப்புரை 154H(1), (2) இற்கு இணங்க ஒரு நியதிச்சட்டமானது ஆளுனரின் சம்மதம் பெற்ற பின்னரே நியதிச்சட்ட நிலையை பெறும். ( ஆளுநர் அதனை அனுமதிக்கலாம் அல்லது சில திருத்தங்களை பிரேரித்து மீள அனுப்பலாம்). பாராளுமன்றில் ஒரு சட்டமானது 2/3 பெரும்பாண்மை பெற்றபின்பு சபாநாயகர் மற்றும் ஜனாதிபதி கையெழுத்திடும் வழக்கம் உண்டு இது வெறுமனே பெயரளவானதாகும். இவர்கள் இச்சட்டங்கள் தொடர்பாக பிரேரணைகளையோ அல்லது தம் கருத்துக்களையோ முன்வைக்க முடியாது ஆனால் ஆளுநர் நியதிச்சட்டங்கள் தொடர்பாக தன் கருத்துக்களை முன்வைக்கலாம் என்ற தன்மை அவரின் சிறப்புரிமையை காட்டுகின்றதாயினும் மாகாணசபை அமைச்சர்கள் குழு அப்பிரேரணைகள் அவசியமானவை என்று கருதினாலே அம்மாற்றங்களை அமுல்படுத்தும் இது ஆளுநருக்கு சவாலான ஒரு விடயமாகும். அத்தோடு ஆளுநர் என்பவர் ஜனாதிபதியால் நியமனம் பெறும் ஒருவராவார் மேலும் ஜனாதிபதியின் விருப்பிற்கிணங்கவே பதவி வகிப்பதோடு அவரின் வழிகாட்டல்களின் நிமித்தம் செயற்படுதல் வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவை நிறைவேற்று அதிகாரம் ஆளுநர் மீது கொண்ட கட்டுப்பாட்டை பிரதிபலிக்கிறது.

மாகாணசபையால் உருவாக்கப்படும் நியதிச்சட்டங்களை இரண்டு சூழ்நிலைகளில் ஆளுநர் நிறுத்திவைக்கலாம்.

- அவர் வழங்கிய பிரேரணைகளை மேற்கொள்ளும் வரை,
- நியதிச்சட்டம் அரசியலமைப்பிற்கு முரணாணது என்றால்

ஆனால் சட்டத்தை பொறுத்தவரை அது அரசியலமைப்பிற்கு முரண் என்றாலும் அதன் தலைப்பில் அச் சட்டம் அரசியலமைப்பிற்கு முரணாணது என இடுவதன் மூலம் சட்டமாக்க முடியும்.(அவசரநிலைச்சட்டம்). இத்தகைய தன்மை இந்திய அரசியலமைப்புடன்(Indian Constitution) ஒத்துப்போகக் காணலாம்.( IC. Art-201)

## மாகாணசபைச் சட்டங்களை நிறைவேற்றும் படிமுறைகள்

- மாகாணசபை நிரலிலுள்ள விடயங்கள் தொடர்பாக,

பாராளுமன்றமானது இந்நிரலிலே சட்டமியற்ற முடியம். இது தொடர்பாக வர்த்தமானி பத்திரிகையில் வெளியிட்ட பின்பும், அதை பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் இடமுன்னரும் ஜனாதிபதி ஒவ்வொரு மாகாண சபைகளுக்கும் அச் சட்டம் தொடர்பான கருத்துக்களைப் பெற ஆவணசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அனைத்து மாகாணசபைகளும் அது தொடர்பாக உடன்படுகின்றவிடத்து சாதாரண பெரும்பாண்மையுடன் நிறைவேற்றப்படும் [154G(3)(a)]. ஆனால் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாகாணசபைகள் அதை ஏற்காதவிடத்து உறுப்புரை 82 இற்கு அமைய விஷேட பெரும்பாண்மையுடன் நிறைவேற்றப்படும் [154G(3)(b)]. [(இதுபோன்றே மாகாணசபைகளும் நியதிச்சட்டங்களை நிறைவேற்றுகின்றன(154G(2)] இத்தகைய சட்டம் அனைத்து மாகாணசபைகளுக்கும் பிரயோகிக்கப்படும். சில விடயங்களில் விதிவிலக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட சபைகளுக்கு மட்டும் பிரயோகிக்கப்படும். (தற்போது விமர்சனங்களை தோற்றுவித்துள்ள 'திவி நெகும' திட்டம் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு).

இவ்வாறாக நிறைவேற்றப்பட்ட சட்டம் மாகாணசபையின் நியதிச்சட்டத்துடன் முரண்படுகின்ற விடத்து சட்டமே மேலோங்கிக் காணப்படும். மற்றும் மாகாணசபைகளின் வேண்டுகோளிற்கு இணங்கவும் பாராளுமன்றம் இந்நிரலில் சட்டமியற்றும். இதன்படி தாமாக பாராளுமன்றத்திற்கு வழங்கிய சட்டமாக்கல் தொடர்பான அதிகாரங்களை மீண்டும் தாம் பெற்றுக்கொள்ளவும் முடியாது அத்தோடு இவை தொடர்பாக நியதிச்சட்டங்களை இயற்றவும் முடியாது. இத்தகைய தன்மையானது இந்நிரலின் செயலற்ற நிலையையே பிரதிபலிக்கின்றது.

- ஒதுங்கிய நிரலிலுள்ள விடயங்கள் தொடர்பாக,

154G(5) இற்கு இணங்க பாராளுமன்றமும், மாகாணசபைகளும் முறையே சட்டத்தையும், நியதிச்சட்டங்களையும் இயற்ற முடியும். இங்கு இரண்டு வழிமுறைகள் பின்பற்றப்படவேண்டியுள்ளது. பாராளுமன்றம் சட்டங்களை இயற்றும்போது மாகாணசபைகளின் ஆலோசணைகளையும், மாகாணசபைகள் நியதிச்சட்டங்களை இயற்றும்போது பாராளுமன்றின் ஆலோசணைகளையும் ஏற்று நடைமுறைப்படுத்தல் வேண்டும் என்பதாகும். இத்தகு சூழ்நிலையில் மாகாணசபைகள் ஆலோசணை பெறுவது வழக்குகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட போதிலும் பாராளுமன்றம் எவ்வளவு தூரத்திற்கு எவ்வாறு பெற்றக்கொள்ளவேண்டும் என்பது வரையறுக்கப்படாமையால் அது தன் தற்துணிபில் செயல்படும் நிலைமை காணப்படுகின்றது. சில வழக்குகளில் மாகாணசபைகளின் ஆலோசணை பெறுவது அவசியம் என்ற போதும் 13வது திருத்தச்சட்டம் தொடர்பான ஒரு வழக்கிலே மாகாணசபையென்பது துணைசட்டவாக்க உறுப்பே தவிர இறைமை அல்லது உயரிய எத்தன்மையும் வாய்ந்ததல்ல என்ற கருத்தினால் இங்கும் பாராளுமன்றின் மேலாண்மையே வெளிப்படுகிறது.

- ஒதுக்கிய நிரலென்பது தேசிய அரசின் அதிகாரங்களைக் கொண்டுள்ளன. இதில் மாகாணசபைகள் எத்தகு தலையீடுகளையும் செய்யமுடியாது.

இவ்வாறாக மாகாணசபையின் சட்டவாக்க தன்மை பாராளுமன்றால் வழங்கப்பட்ட போதும் அவை இறைமையுடையவை அல்ல என்பது பல இடங்களிலும் வெளிக்காட்டப்பட்டுள்ளன. மேலும் பாராளுமன்றமானது தனது நிரலில்(ஒதுக்கியநிரல்) ஆரம்பத்திலே குறிப்பிடப்பட்டுள்ள தேசிய முக்கியத்துவம்(National Policy on all subjects and functioned) என்பதனடிப்படையில் எந்தவொரு நிரலிலும் சட்டவாக்கவுரிமையை பிரயோகிக்கமுடியும். மேலும் இம்மூன்று நிரலிலும் குறிப்பிடப்படாது தவிர்ந்த ஏனைய அனைத்து அதிகாரங்களும்(Residuary powers )பாராளுமன்றத்திடமே பாரப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி பல்வேறு நியதிச்சட்டங்களில் கூறப்பட்டுள்ள மாகாணசபைக்குரிய அதிகாரங்கள் தேசிய கொள்கை முக்கியத்துவம் காரணமாக அரசாங்கத்திற்குட்பட்டதாக மாற்றம் பெற்றுள்ளன. (உ.ம்- The national transport commission act no 37 of 1991, In-Re agrarian services amendment bill.) இவற்றிலுள்ள மாகாணசபைக்குரிய போக்குவரத்து மற்றும் விவசாயம் தொடர்பானவையே அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் மாற்றப்பட்டன. தற்போது திருகோணமலை தள வைத்தியசாலை இவ்வாறாக மாகாணசபையின் கீழிருந்து தற்போது தேசியரசின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

154G(8) இணங்க இந்த அத்தியாயம் (Chp xvii) ஆரம்பிக்கு முன் மாகாணசபை நிரலிலுள்ள ஒரு விடயம் தொடர்பான சட்ட ஏற்பாடு இருந்து இந்த அத்தியாய ஆரம்பிப்பின் பின் அதே விடயம் தொடர்பில் மாகாணசபை நியதிச்சட்டமொன்றினை இயற்றினால், அதனை அதன் நீண்ட தலைப்பில் சட்டத்திற்கு முரணானது என குறிப்பிடுவதன் மூலம் சம்மதத்தினைப் பெற்றால் அக் குறிப்பிட்ட மாகாணத்தில் அது பிரயோகிக்கப்படுவதோடு அதன் குறிப்பட்ட காலத்திற்கு சட்டம் இடைநிறுத்தப்படும்.

இதுபோலவே 154G(9) ஒருங்கிணை நிரலிலுள்ள ஒரு விடயம் தொடர்பாக ஏலவே சட்டம் காணப்பட்டு பின்பு அது தொடர்பாக மாகாணசபை நியதிச்சட்டத்தினை இயற்றினால் பாராளுமன்றம் தீர்மானத்தின் மூலம் இதனை தீர்க்க தீர்மானம் மேற்கொண்டு அதனை ஏற்றுக்கொண்டால் அது அக்குறிப்பிட்ட மாகாணத்திற்கு பிரயோகிக்கப்படும்.

இவ்வாறு மாகாணசபை நிரல், ஒருங்கிணை நிரல் தொடர்பில் மாகாணசபை சட்டமாக்கல் தொடர்பான கட்டுப்பாடு இயல்பாகவே பாராளுமன்றின் இறைமையை வெளிப்படுத்தி அது தன் அதிகாரத்தை துணை உறுப்புகளுக்கு முறையாக வழங்கவில்லை என்பதை உறுதிப்படுத்துகிறது. ஒரு விடயம் தொடர்பாக மாகாணசபையால் ஒரு நியதிச்சட்டம் இயற்றப்பட்டால் மாகாணங்கள் அவை தொடர்பான கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாகிவிடும். மாகாணசபைகள் பொருளாதாரம், வளங்கள் மற்றும் வேறு சலுகைகள் அனைத்தையும் தேசிய அரசிடமருந்தே பெறுகின்றன. இதனால் இவை பாராளுமன்றுடன் முரண்பட்டு சட்டமியற்றும் என்பது எண்ணமுடியாதவொரு விடயமாகும்.

இலங்கை தனது அரசியலமைப்பு மற்றும் பிற சட்டங்கள் பலவற்றையும் அயல்நாடான இந்தியாவை அடியொற்றியே மேற்கொள்கின்றன. அந்தவகையில் 13வது திருத்தத்தில் பரவலாக்கப்பட்ட அதிகாரங்கள் இந்தியாவில் மாநிலங்களுக்கும், மத்திய அரசிற்கும் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களை ஒத்தவையாகும். இவ்வதிகாரங்கள் குறிப்பிட்டு கூறுமளவிற்கு வெளிப்படையானவை. ஆனால் எமக்கு பரவலாக்கப்பட்டவை இத்தகு வெளிப்படையற்றவை. அத்தோடு இத்தகைய சட்டவாக்க அதிகாரமானது பயனற்ற தன்மை வாய்ந்தது என்பதை உறுப்புரை 154G(11) சுட்டிக்காட்டுகிறது.(மாகாணசபை நிரலிலுள்ள எத்தகைய விடயம் தொடர்பிலும் அதன் ஆலோசணைகள் எவையுமின்றி அரசு பிற நாடுகளுடன் ஒப்பந்தங்கள், கைச்சாத்துக்கள் போன்ற எவற்றையும் மேற்கெள்ள முடியும்.)

இவ்வாறாக பரவலாக்கப்பட்டுள்ள அதிகாரங்களினால் எவ்வித பயன்பாடுகளும் இல்லை. மற்றும் இன்றுவரை மாகாணசபைகளால் ஒரு சில நியதிச்சட்டங்களே இயற்றப்பட்டுள்ளன. ஆதலால் உறங்கிய நிலையிலுள்ள இத்தகு திட்டத்திற்கு இயங்குதன்மை அளிக்க வேண்டியது மக்களின் கடமையே.

With Best Compliments From
SS Digital's
Printers for all requirements
#58, Vidyalayam Road, Trincomalee.
Off: 026 2224933 Mob: 0715419854, 0773663103 & ssdigitals.shan@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் உலக வலம்

## இறந்து ஓர் வாரமாகியும் எவராலும் பொருட்படுத்தப்படாத வான் பாய்வு வீரன்

நெதர்லாந்தின் பிரபல்யமான வான் பறப்புப் பாய்வுக் கழகத்தின் மிகத் தேர்ச்சி பெற்ற பாய்வு வீரனொருவன் வான் பாய்வின் போது மரணமாகி ஒரு வாரமான போதிலும் எவராலும் சட்டைசெய்யப்படாமல் கிடந்த செய்தி அதிர்ச்சியை உண்டு பண்ணியுள்ளது.

வான் மார்க் டென் போகார்ட் என்ற பெயருடைய வான்பாய்வு வீரனுக்கே இந் நிலை ஏற்பட்டுள்ளது. ஏழு நாட்களுக்கு முன் வான் பாய்வுக்கென புறப்பட்டுச் சென்ற இவர் வானிலிருந்து அன்றைய தினமே குதித்துள்ள போதிலும் அவரது பறப்புடையின் பகுதி வேலை செய்ய மறுத்துள்ளதால் நிலத்தில் விழுந்து சிதறி மரணமாயுள்ளார்.

எனினும் அடுத்த ஒரு வாரமாக அவரைப் பற்றி யாருமே பொருட்படுத்தவில்லை. வேட்டையாடுவதற்காகக் காட்டுக்குச் சென்ற குழுவொன்றினால் சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்ட பின்னரே தகவல்கள் வெளியாகத் தொடங்கியுள்ளன. பறப்புக் கழகத்தின் மேலாளர் இவ் விடயம் தொடர்பாக கருத்துக் கூறும் போது தமது கழகத்தில் வானிலிருந்து பாய்பவர்களின் நிலை என்ன என ஆராய்வு செய்யும் ஏற்பாடுகள் எவையும் தற்போது வரை மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவித்துள்ளார்




## தென்கொரியாவின் முதல் பெண் சனாதிபதி

### வட கொரியாவுடன் சமாதானம் செய்ய முயற்சி

தென்கொரிய முதல் பெண் சனாதிபதியான பாக் ஜெயுன் ஹே வடகொரியாவுடன் பேச்சு வார்த்தைக்குச் செல்ல விரும்புவதாக அறிவித்துள்ளார்.

வடகொரியாவின் நீண்ட தூர ஏவுகணை பரீட்சிப்பைத் தொடர்ந்து தென் கொரிய சனாதிபதி தனது உரையை மக்களுக்கு ஆற்றும் போது தென்கொரியாவின் பாதுகாப்பு எவ்வளவு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது என்பது தெளிவாகத் தெரிகின்றது என்றார்.

வடகொரியாவுடன் பேச்சுக்களை நடாத்த பிராந்தியத்தில் அமைதியைப் பேணும் விருப்பத்தைக் கொண்டுள்ள புதிய பெண் சனாதிபதி அவ்வாறான பேச்சுக்களில் வடகொரியா இதய சுத்தியுடன் நேர்மையாக ஈடுபட்டால் மட்டுமே தான் அப் பேச்சுக்களைத் தொடர முடியும் என தெரிவித்துள்ளார்.



## மாலியின் வடபகுதியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இராணுவ நடவடிக்கை - ஐநா. பாதுகாப்புச் சபை அங்கீகாரம்

ஆபிரிக்கக் கண்டத்தின் மாலி நாட்டில் வடபகுதியைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ள இஸ்லாமியத் தீவிரவாத அமைப்புக்களிடமிருந்து பிரதேசங்களை மீளக் கைப்பற்றும் பொருட்டு மாலியின் அரச படைகளுக்கு உதவ ஐ.நா. பாதுகாப்புச் சபை அமெரிக்க பின்புல நேச நாடுகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் அடிப்படையில் ஆபிரிக்காவின் தலைமையில் இராணுவ நடவடிக்கைகளை மாலியின் வடபகுதியில் மேற்கொள்ளும் முயற்சிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஐரோப்பிய ஒன்றியமும் ஐ.நாவின் அங்கத்துவ நாடுகளும் மாலியின் சிதைவடைந்த இராணுவக் கட்டமைப்பினை மீள் நிர்ணயம் செய்வதற்கு பெரும் பங்காற்றி வருகின்றன.

தற்போது ஐ.நா வினால் வழங்கப்பட்டுள்ள அனுமதியைத் தொடர்ந்து ஆபிரிக்கத் தலைமையிலான சர்வதேச உதவி இராணுவப் படையணி மாலியின் வடபகுதியைக் கைப்பற்ற தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவுள்ளது.



## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள்

**கீழ் உள்ள கவிதையினைக் கொண்டு அதன் கீழ் உள்ள வினாக்களிற்கான சரியான விடையைத் தெரிவு செய்க.**

மல்லிகைப் பூ பூத்திருக்கும்
நீளப் புல் வெளியினைப் போல்
அதோ பார் அந்த வானம்
என்ன அழகு இரவினிலே

1. இக்கவிதையில் பெயராகவும் வினையாகவும் வரும் சொல் இடம்பெற்றுள்ளது.
   1. சரி 2. கூறமுடியாது 3. பிழை
2. இக்கவிதையில் கூறப்படுவது
   1. வானம் பற்றி 2. பூக்கள் பற்றி 3. இரவு வானம"

4. இலங்கையில் திறந்து வைக்கப்பட்ட அதிவேக நெடுஞ்சாலை எந்த இரு நகரங்களை இணைக்கின்றன.
   1. கொழும்பு - யாழ்ப்பாணம் 2. கொழும்பு - கண்டி
   3. கொழும்பு - மாத்தறை
5. நீண்ட தூர ஓட்டமாக கருதப்படும் விளையாட்டு நிகழ்ச்சி எது?
   1. 4 x 400m 2. மரதன் ஓட்டம் 3. 1000 m
6. இலங்கையின் பாரம்பரிய கைப்பணிப் பொருட்களை விற்பனை செய்யும் இடம்
   1. சலுசல 2. ஜனகலாகேத்திரம் 3. ஓசுசல
7. இன்றைய நவீன தொழில்நுட்பத்திற்கு சவால் விடக்கூடிய இராட்சத கால்வாயை அமைத்த மன்னன்
   1. தாதுசேனன் 2. மகாசேனன்
   3. பராக்கிரமபாகு
8. கீழ் உள்ள பிராணிகளில் இரவில் நடமாடுவது?
   1. ஆட்காட்டிக்குருவி 2. வல்லூறு 3. நரைப்புளுணி
9. இலங்கையில் இறுதியாக சுனாமி ஏற்பட்ட ஆண்டு, மாதம் எது?
   1. 2004 நவம்பர் 2. 2003 டிசம்பர் 3. 2004 டிசம்பர்
10. தொலைந்து போன அடையாள அட்டை பற்றிய தகவலைத் தெரிவிக்க வேண்டிய இடம்?
    1. கிராமசேவகர் அலுவலகம் 2. பிரதேச செயலகம்
    3. பொலீஸ்நிலையம்
11. 2012ல் தனது 25வது பிறந்ததினத்தைக் கொண்டாடும் அம்மு தனது 18வது பிறந்ததினத்தை எந்த ஆண்டில் கொண்டாடினார்?
    1. 2004 2. 2005 3. 2006

**கீழ்வரும் தகவலை வாசித்து 12, 13ம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

பிற்பகல் 1.35இற்கு வீட்டிலிருந்து புறப்பட்ட ஞானம் 40 நிமிடங்களில் தனது நண்பனின் வீட்டிற்குச் சென்றான். அவனது வீட்டில் 10 நிமிடங்கள் இருந்துவிட்டு இருவருமாக 35 நிமிடங்கள் பயணித்து விளையாட்டு மைதானத்தை அடைந்தனர். அங்கு 2 மணி 55 நிமிடங்கள் விளையாடிய பின் வீடு செல்லத் தயாராயினர்.

12. ஞானம் எத்தனை மணிக்கு தனது நண்பனின் வீட்டிலிருந்து புறப்பட்டான்?
    1. பிற்பகல் 2.25 2. பிற்பகல் 2.15 3. பிற்பகல் 2.05
13. அவர்கள் விளையாடி முடித்து வீடு செல்லத் தயாரான நேரத்தை 24 மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டுவது?
    1. 17.20 மணித்தியாலம் 2. 17:55 மணித்தியாலம்
    3. 5.55 மணித்தியாலம்
14. 500 இனிப்புக்களில் 80ஐ மீதப்படுத்தி வைத்து மற்றைய எல்லா இனிப்புக்களையும் ஒரு பைக்கற்றில் 7 இனிப்புக்கள் வீதம் சிறிய பைக்கற்றுக்களாக்கப்பட்டன. எனின் பொதி செய்யப்பட்ட பைக்கற்றுக்களின் எண்ணிக்கை யாது?
    1. 60 2. 50 3. 70
15. 150 செ.மீ நீளமுள்ள ஓர் கயிற்றுத் துண்டின் நடுவில் 20 செ.மீ நீளமுள்ள பகுதி சேதமடைந்துள்ளது. அப்பகுதியை அகற்றி மீதி இருதுண்டுகளும் 5செ.மீ வீதம் ஒன்றின் மீது ஒன்று வைத்து ஒட்டப்பட்டன. தற்போது அக் கயிற்றுத் துண்டின் நீளம் யாது?
    1. 130 செ.மீ 2. 120 செ.மீ 3. 125 செ.மீ
16. 11,000 ரூபாவின் 3/4 பங்கு ஒரு தொகைப் பணத்தின் 1/4 பங்கிலும் 1,000 ரூபாவால் அதிகமாகும். எனின் அவ் ஒரு தொகைப் பணம் எவ்வளவு?
    1. ரூபா 6,000 2. ரூபா 4,500 3. ரூபா 4000
17. ஒரு பேருந்து வண்டியில் 41 பயணிகள் பிரயாணம் செய்தனர். முதல் தரிப்பில் 6 பேர் இறங்க 3 பேர் ஏறினர். இரண்டாம் தரிப்பில் 12 பேர் இறங்க 7 பேர் ஏறினர். மூன்றாவது தரிப்பில் 5 பேர் ஏற 3 பேர் இறங்கினர். இப்போதுள்ள பயணிகளின் தொகைக்கும் ஆரம்பத்தில் இருந்த பிரயாணிகளின் தொகைக்கும் இடையிலான வித்தியாசம் எவ்வளவு?
    1. 16 2. 6 3. 10
18. 6 கிலோ 750 கிராம் சீனியை சமமான ஐந்து பக்கட்டுக்களில் அடைத்தால் ஒரு பக்கட்டில் உள்ள சீனியின் அளவு யாது?
    1. 1 கிலோ 350 கிராம் 2. 1 கிலோ 250 கிராம்
    3. 1 கிலோ 450 கிராம்

- பிரதீபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன் எழுந்து நிற்கும் தமிழரின் தலை விதிக் கேள்வி – எவ்வாறு ?

இவ் வாரத்திலிருந்து நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னுள்ள ஆபத்துக்கள் தொடர்பாக அலசலாம்.

ஆபத்துக்கள் என்பவை எமது பலவீனங்களைக்குறிவைத்து வெளியகச் சக்திகளால் உருவாக்கப்படும் சாதகமற்ற நிலைமைகள் ஆகும். ஆகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிரான வெளியகச் சக்திகள் எவை என ஆராய முற்படும் போது அவை இயங்கும் பிரதேசத்தினை அடிப்படையாகக் கொண்டு இரண்டாக வகுத்து நோக்குதல் இலகுவாய் இருக்கும்.

பிரதேசத்தின் அடிப்படையில் வகுக்கும் போது ஆபத்தை உருவாக்கும் சக்திகளை முறையே உள்நாட்டில் இயங்கும் சக்திகள் எனவும் வெளிநாட்டில் இயங்கும் சக்திகள் எனவும் பிரித்து நோக்குதல் சாலச் சிறந்ததாய் அமைவதற்குக் காரணம் யாதெனில் உள்நாட்டில் இயங்கும் சக்திகளின் பின்புலம் நேரடியானதும், மிக உறுதியானதுமான அரச அல்லது பேரினவாதச் சக்திகளின் வலுவைக் கொண்டமைந்திருப்பதும், வெளிநாட்டில் இயங்கும் சக்திகளின் பின்புலத்தில் அரசினதும் பேரினவாதச் சக்திகளினதும் மறைக்கரங்கள் தொழிற்படுவதுமே ஆகும்.

உள்நாட்டில் இயங்கும் சக்திகளால் உருவாக்கப்பட்டுள்ள ஆபத்துக்களின் முதலாவது ஆபத்தாகக் கருதவேண்டிய ஆபத்து யாதெனில் உள்நாட்டிலுள்ள தமிழ் மக்களின் செல்வாக்கை - நம்பிக்கையை சிறுகச் சிறுக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இழந்து வருதலாகும்.

விசேடமாகக் கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செல்வாக்கு சரியத் தொடங்கியிருப்பதையே கடந்த காலத் தேர்தல்ப் பெறுபேறுகளும் அத் தேர்தல்களில் வாக்களித்த மக்களின் விகிதாசாரமும் சுட்டி நிற்கின்றன.

அவ்வாறு கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செல்வாக்குச் சரிவுக்கான முக்கிய காரணி யாதென ஆராய்வோமானால் அரசு பின்பற்றும் அதிகாரக் கொள்கையே காரணம் என அறிய முடியும். பேரினவாத அரசு வடக்கில் பின்பற்றும் அதிகாரக் கொள்கையிலிருந்து முற்றிலும் வேறுபட்ட அதிகாரக் கொள்கையையே கிழக்கில் நடைமுறைப் படுத்தியுள்ளமை தெளிவாகத் தெரிகின்றது. இங்கு அதிகாரக் கொள்கை என்பது அரசு அதிகாரத்தைப் பிரயோகிக்கும் கட்டுப் பாட்டுப் போக்கைக் (Control Style) கருதும்.

வடக்கில் கடும் கட்டுப்பாட்டின் கீழ் வாழும் மக்களின் மனநிலையானது கட்டுப்பாட்டிற்கு எதிரான மனநிலையையே தோற்றுவிக்கின்றது. அவ்வெதிர் விளைவுகளைச் செயல் வடிவமாக முன்னெடுத்துச் செல்வதற்கு அம் மக்களுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட ஏனைய எந்தக் கட்சிகளும் இல்லை. எனவே அம் மக்களின் உணர்வுகளை முன்னிறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கில் செய்யும் போராட்டங்களால் அக் கட்சியின் செல்வாக்கு அப் பிரதேசங்களில் தக்கவைக்கப்பட்டுள்ளது என்பது உண்மை.

ஆனால் கிழக்கில் அரசு கையாளும் கட்டுப்பாட்டுப் போக்கானது மிதவாத மென்போக்கு ஆகும். அதாவது அடக்குமுறையை நேரடியாகப் பிரயோகிக்காமல் அரை வேக்காட்டு அறிவுடைய மக்களுக்கு தாம் சுதந்திரமாக இருப்பதான உணர்வைக் கொடுத்து அம் மக்கள் உச்ச சுதந்திரத்தை அனுபவிக்க முயற்சிக்கும் போது அதற்கான தடைகளைப் பல்வேறுவிதமாக உருவாக்கி பயம் என்ற போர்வைக்குள் சுதந்திரம் என்னும் மாய உலகை உருவாக்கி வைத்திருப்பதாகும்.

அதற்கான உதாரணங்களைப் பார்ப்போமானால் மிகச் சிறந்த உதாரணமாக கிழக்கின் பொது நிர்வாகத் துறையை அரசு சீருடைமயப்படுத்தி யிருப்பதைச் சொல்லலாம்.

கிழக்கின் மாகாண ஆளுநர் மற்றும் விசேடமாகத் திருமலையின் அரச அதிபர் ஆகியோர் சீருடையணிந்தவர்களே. இங்கு விசேடமாகத் திருமலையில் பிரதேசச் செயலாளர்கள் இனந் தெரியாப் பயமொன்றுடன் தமது பணிகளை முன்னெடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. அவ்வாறே அரச அதிகாரிகளினதும் நடவடிக்கைகள் பயம் காரணமாகக் கட்டுப்படுத்தப்பட்டு விடுகின்றது. ஆகவே பரவிக் கிடக்கும் இந்தப் பயம் காரணமாக மக்கள் தமது மனவெழுச்சிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் எடுத்துச் செல்ல விருப்பின்றிக் கிடக்கின்றனர். தற்செயலாக எடுத்துச் சென்றாலும் அதற்கேயுரிய பலன்கள் கிடைக்குமா என்னும் கேள்வியும் அவர்களிடம் எஞ்சிக்கிடக்கின்றது. இந்த நிலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் கைப்பற்றப்பட்டுள்ள சாதாரண பிரதேச சபை, நகரசபை தொடக்கம் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் வரை விரவிக் கிடப்பதை மக்கள் பல தடவைகள் உணர்ந்துள்ளனர்.

இதனால் மக்களுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் ஏற்பட்டுவரும் சிறிய இடைவெளிகளில் ஏனைய எதிரணிக் கட்சிகள் தமது வேர்களை மெதுவாகப் பரவ விடத் தொடங்கியுள்ளன.

அத்துடன் தமது நலன்களைப் பேணமுடியாது தோற்றுப்போன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நீண்டகால உறுப்பினர்கள் எனச் சொல்லிக் கொள்பவர்களிற் சிலர் புதிய தமிழ் அரசியற் கட்சிகள் தொடர்பான காத்திரமான பேச்சுக்களில் கிழக்கில், விசேடமாகத் திருமலையில் தொடங்கி யுள்ளனர். பகுதியளவான மக்களும் இப் பேச்சுக்களை நோக்கித் தமது செவிகளைத் திருப்பத் தொடங்கியுள்ள நிலையில் மெதுவாக இழக்கப்படும் செல்வாக்குச் சரிவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மிகப் பெரும் ஆபத்தாக அதன் முன் எழுந்து நிற்கின்றது.

அடுத்த ஆபத்தை நோக்கி மறுவாரம் நகர்வோம்........

– மாயன் –

# சவூதி அரேபியாவில் தன்னை மாய்த்துக் கொண்ட திருமலைப் பெண்

சவுதி அரேபியாவிற்கு வீட்டுப் பணிப்பெண்ணாக சென்ற திருகோண மலை தேவநகரில் வசித்து வந்த வறிய குடும்பத்தைச் சேர்ந்த இராசதுரை நந்தினி (வயது 34) என்பவரே மரணமான நிலையில் சடலமாக திருகோணமலைக்கு கொண்டுவரப்பட்டு 12.12.12 அடக்கம் செய்யப்பட்டுள்ளார்.

82 வயது முதிர்ந்த தனது தந்தை, ஆதரவற்று இருக்கும் தனது சகோதரி மற்றும் சகோதரியின் இரண்டு பிள்ளைகள் அவர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டே இவர் எட்டு வருடங்கள் ஜோர்டான், இரண்டு வருடங்கள் துபாய் என மத்தியகிழக்கு நாடுகளிலே பத்து வருடங்கள் தன் வாழ்கையோட்டத்தை மேற்கொண்டுள்ளார்.

சவூதி அரேபியாவிலுள்ள தமாம் என்னும் பகுதியிலுள்ள வீட்டிலேயே இவர் தற்கொலை செய்து கொண்டதாக தெரிவித்தே இவரது சடலம் திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த ஆகஸ்ட் மாதம் மேற்படி பெண் தனக்கு அங்கிருக்க முடியாதெனவும் தன்னை மீள அழைக்குமாறும் தன் சகோதரியிடம் கேட்டுக்கொண்டதாகவும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில வருடங்களாக அதிகமாய் சமூகத்தை கெடுத்திருப்பவை பாலியல் குற்றங்கள்தான். இவை எப்படி நிகழ்கின்றன. தனிமையின் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு தட்டி கேட்க யாரும் இல்லைதானே என்ற அகங்காரம் ராட்சச விஷ்வரூபம் எடுத்து மொத்தமாய் எல்லை கடந்து அத்துமீறி தன் காமப்பசியை தீர்த்துக் கொள்கிறது.

இராசதுரை நந்தினிக்கும் இத்தகைய ஒரு சம்பவம் நிகழ்ந்திருக்கலாம் அல்லது அத்தகைய ஒரு சூழ்நிலை ஏற்பட அதிக சந்தர்ப்பங்கள் இருந்திருக்கலாம் அதன் மன அழுத்தங்கள் காரணமாகத் தான் தன்னால் இங்கு இருக்க முடியவில்லை தன்னை எப்படியாவது இங்கிருந்து எடுக்குமாறு அவர் தன்னுடைய சகோதரியிடம் கூறியிருக்கலாம்.

28.08.2012ல் இறந்து விட்டதாக தெரிவித்திருக்கும் சவூதி அரேபிய தூதரகம் அத்தகவலை காலம் தாழ்த்தி அதாவது சுமார் மூன்று மாதங்கள் கடந்த நிலையிலே இராசதுரை நந்தினியின் குடும்பத்திற்கு தெரியப்படுத்தியுள்ளது.

தற்கொலை செய்து இறந்துள்ளார் என்று தெரிவிக்கும் தூதரகம் அதற்குரிய சரியான காரணத்தையோ அல்லது அவர் எவ்வாறு தற்கொலை செய்துகொண்டார் என்பதையோ கூற மறுக்கிறது. இவ்வாறு பல மர்மங்கள் இவரின் மரணத்தில் இருப்பதால் தாம் இது தொடர்பாக சந்தேகம் கொள்வதாக அவரின் குடும்ப உறவினர்கள் மலைமுரசிற்கு தங்களுடைய கருத்தை தெரிவித்திருந்தனர்.

மேலும் அவருடைய குடும்ப நண்பர் கூறியதாவது இராசதுரை நந்தினி வீட்டுப் பணிப்பெண்ணாக சவூதி அரேபியா செல்வதற்கு உள்ளூரில் உள்ள [illegible] முகவர்களாக செயற்படுபவர்கள்

(10ம் பக்கம் பார்க்க)

## உனது பிரிவின் பின்...

நேரம் மணி ஆறு – மாலை

ஒளியில்லை
நிலவுமில்லை – மங்கள்...

நீ
தயாராய் விட்டாய்
போவதற்கு...

தலைக் கவசம்
அணிந்த பின்
புன்னகையையும்
கண்ணின் வெண்திரையையும்
தவிர
எதையும் வெளிக்காட்டாது
உன் நிறம் -
முகமும் கூட

மெதுவாய் உறுமிப் பின்
ஒலியடங்கிய மோட்டார்
சைக்கிளின் மீதில்

நீ போய் விட்டாய் ...

எனினும்

காலையிலிருந்து
கணங்கணமாய்ச்
சுகித்தும் தகித்தும்
சிரித்தும் சினந்தும்

நீ உதிர்த்த
ஒலிகளின் அலைகள்

என் அறையில்,
கூடத்தில்,
குசினியில் எல்லாம்
கொட்டிக் கிடக்கின்றது...

ஒரு சேரக் கூட்டி
எடுத்துச் செல்
அவற்றையும்....

குப்பைதான் அவை

எடுத்துச் செல்

எனினும்

அதனுள்

என் மனமும்
புலனும்

தடித்த புத்தகங்களின் வாசிப்பால்
மரத்துப் போன புத்தியும்....

ஏன்...

சிதிலஞ் சிதிலமாய்ச்
சிதறிக் கிடக்கும் நானும் ...

எடுத்துச் செல்
அவற்றையெல்லாம்

உன் ஒலிகளையும்
என் சிதிலங்களையும்
ஒரு சேர .. .. .. ..

என்
மரணத்தின் பின்னே .. .. .. ..

சஞ்சுதன்
23-10-2004

"படர்க்கை"
திருமலையிலிருந்த வெளியாகவுள்ள கலை
இலக்கிய சஞ்சிகை
உங்களின் காத்திரமான ஆக்கங்களும் வெளி வர
களம் சமைக்கவுள்ளது
தொடர்பு : 077 005 0036

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூர் அனல் மின் . . .

சம்பூர் அனல் (நிலக்கரி) மின் நிலையப் பணிகளின் கட்டுமானப் பணிகள் வருடங்கள் பிந்தியுள்ள நிலையில் இவ்விடயம் தொடர்பாக இலங்கைக்கும் இந்தியாவிற்கு இடையில் கடுமையான போக்குகளே நிலவி வருவதைக் காணமுடிகின்றது.

இந்தியாவின் அரசுக்குச் சொந்தமான நிறுவனமான இந்தியத் தேசிய நீராவி வலுக் கூட்டுத்தாபனத்திற்கும் இலங்கையின் மின்சார சபைக்கு மிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஊடாக சம்பூரில் நிலக்கரி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் தொழில் முயற்சியை திருக்கோணமலை வலுக் கம்பனி என்னும் பெயரில் இரு நாடுகளும் மேற்கொள்ளும் முயற்சியில் 2011 ம் ஆண்டின் செப்டெம்பர் மாதம் முதல் உள்ளன.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தப்படி கட்டுமாணப் பணிகளையும், நிபுணத்துவ ஆட்பல வழங்கலையும், தொழில்நுட்ப அறிவையும் இந்தியா வழங்கும்போது இலங்கையின் மின்சாரசபை நிலக்கரிக் கொள்வனவையும், இயக்குதற் செலவுகளையும், பராமரிப்புச் செலவுகளையும் ஏற்கவும் ஒத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

இப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஊடாக இந்திய நீராவி வலுக் கூட்டுத்தாபனம் பெரும் இலாபமடையும் சாத்தியக்கூறுகள் அதிகம் இருப்பதாக தற்போது மின்சார சபை எதிர்வுகூறியுள்ளது. ஏனெனில் இந்திய நீராவி வலுக் கூட்டுத்தாபனம் தனது முதலீட்டின் மீது பெரும் வருமானத்தை எதிர்பார்ப்பதுடன் தனது கடன்களுக்கு அதிகூடிய வட்டி வீதத்தையும் எதிர்பார்க்கின்றது. அத்துடன் இயக்குதற் செலவு மற்றும் பராமரிப்புச் செலவுகளை மின்சாரசபை செலுத்தினாலும் அச் செலவுகளை மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடப் போவதும் இந்திய நிறுவனமே. அவ்வாறுள்ள போது இவ் இந்திய நிறுவனம் இயக்குதல் மற்றும் பராமரித்தல் செலவுகள் என எதிர்வுகூறியுள்ள செலவுகளில் அசாத்திய அதிகரிப்புக்கள் உள்ளதாகக் கருதிய மின்சார சபை கடந்த வாரமளவில் இவ்விரு செலவு மதிப்பீடுகளினையும் மீளாய்வுசெய்து குறைக்குமாறு கோரி புதுடில்லியில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தது.

அத்துடன் நிலக்கரியைச் சூடாக்கும் வீதத்தை குறைத்தால் குறைந்த நிலக்கரியில் அதிகளவு மின்சாரத்தைப் பெறமுடியும் எனும் தொழில்நுட்ப மதிப்பீட்டையும் மின்சார சபை மேற்கொண்டிருந்தது. அதற்கமைய இந்தியக் கம்பனி முன்மொழிந்த நிலக்கரியைச் சூடாக்கும் வீதத்தினை விடக் குறைந்தளவு சூடாக்கும் வீதத்தை அப் பேச்சு வார்த்தையில் முன்மொழிந்திருந்தது மின்சாரசபை. எனினும் ஆரம்பக் கட்டப் பேச்சுவார்த்தை தோல்வியடைந்துள்ளதாகவே தகவல்கள் கசிந்துள்ளன.

இந்தியத் தகவல்களின் படி இலங்கை அதிகாரிகள் இவ்விடயம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை ஆமை வேகத்திலேயே நகர்த்துவதாகவும் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் சீன ஆதரவுடன் உருவான நுரைச்சோலை மின் திட்டம் எவ்வளவு சிறப்பாகச் செயற்படுகின்றது என்பதைச் சுட்டிக் காட்டத் தவறுவதில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

மின்சாரசபையின் இயக்குனர் சபை அண்மையில் நிறைவேற்றிய தீர்மானம் ஒன்றின் ஊடாக இந்தியத் தரப்புடனான பேச்சுக்கள் தோல்வியடையும் பட்சத்தில் உடனடியாகவே பொதுச்சந்தையில் 500 மெகா வோற்று மின்சாரத்தை உற்பத்தி செய்யும் கேள்விமனுக்களை இலங்கை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பணியைப் புறக்கணி . . .

ஹதரஸ்கொட்டுவ, மொரட்டுவ போன்ற இடங்களில் வைத்து கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்படுவதாகவும், இதனால் தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாகவும் குறிப்பிட்டே ஊழியர்கள் இப்போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

தங்காலைக்கு இ.போ.ச வண்டிகளில் 500.00 கட்டணமாகவும், தனியார் வண்டிகளில் 900.00 கட்டணமும் அறவிடப் படுகின்றமையினால் அண்மைக் காலமாக தனியார் பேருந்துக் கார்களுக்கும் இ.போ.ச. வினருக்கும் இடையில் முறுகல் நிலமைகள் காணப்பட்டு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மத்திய பேருந்து நிலையத்திற்கு பேருந்துகளை செலுத்தி வந்த இ.போ.ச ஊழியர்கள் தங்கள் பணிகளில் ஈடுபடாது தமது எதிர்ப்பினைத் தெரிவித்தார்கள்.

அதைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த இ.போ.சவின் நிலையப் பொறுப்பதிகாரி கந்தளாய் வரைக்குமான பிரதேசத்திற்கு மட்டுமே தன்னால் பாதுகாப்பு வழங்கமுடியும் எனத் தெரிவித்ததுடன் இவ் விடயத்தை கொழும்பிற்கும் தெரியப்படுத்தி யிருந்ததாக எமது செய்தியாளர் தெரிவித்தார்






## ஈழத்து எழுத்தாளர். . .

போன்ற விபரங்களை தமக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்துடன் எழுத்தாளர்களின் புகைப்படங்களையும் தந்துதவுமாறும் அவர் அறிவித்துள்ளார்.

விபரங்களை ஆர். மகேந்திரன், இல.34, ரெட்ரிவ் வீதி, பிலெஸ்டோ, இலண்டன், E13 0JX (R.Mahendran, 34, Redriffe Road, Plaistow, London. E13 0JX, UK) முகவரிக்கு அஞ்சலில் அனுப்பி வைக்குமாறும், மின்னஞ்சலாயின் mullaiamuthan@gmail.com mullaiamuthan_03@hotmail.co.uk அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

## நிரந்தர நியமனம் . . .

இவர்களுக்குரிய நியமனக் கடிதங்கள் வழங்கும் வைபவம் திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியின் உள்ளக அரங்கில் 24.12.2012ல் காலை 10 மணிக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளர் தலைமையில் கௌரவ ஆளுநர், கௌரவ முதலமைச்சர், கௌரவ அமைச்சர்கள், அமைச்சின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களின் பங்குபற்றுதலுடன் நடைபெறவுள்ளது. ஆளணி ஆணைக்குழுவினால் புதிதாக அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கமைவாக கிழக்கு மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலுள்ள வெற்றிடங்களுக்கு ஏற்ப நியமனம் பெற்றவர்கள் 01.01.2013ம் திகதி முதல் நியமிக்கப்படவுள்ளனர் என நா.மதிவண்ணன் உதவிச் செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர் (நிருவாகம்), கிழக்கு மாகாணம். அவர்கள் தெரிவித்துள்ளார்.

(கதிரவன்)

## சிவில் பாதுகாப்பு . . .

திருக்கோணமலைப் பொது வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார்.

கத்தி வீச்சை மேற்கொண்டனர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் நால்வர் கைதாகியுள்ளனர். இவர்களைக் கைதுசெய்துள்ள பன்குளக் காவல் துறையினர் மேலதிக விசாரணைகளை முடுக்கும் பொருட்டு அவர்கள் நால்வரையும் விளக்கமறியலில் வைத்திருக்கும் அனுமதியை நீதி மன்றத்தின் ஊடாகப் பெற்றுள்ளனர்.

விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## வெள்ளம் வர முன். . .

இருக்குமாறும் மேலதிக தேவைகள் இருக்கும் பட்சத்தில் முதலமைச்சர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார். கிழக்கு மாகாண மக்கள் நீண்ட காலத் துயரை அனுபவித்தவர்கள் என்றும் யுத்த சூழ்நிலையில் இருந்து விடுபட்டு நிம்மதியான சூழ்நிலையில் வாழ்ந்து வருவதாகவும், இந்நிலையில் பருவகால மழை அனர்த்தத்தினால் பாதிக்கப்படும் போது தாமதமின்றி நிவாரண உதவிகள் வழங்கக் கூடிய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என எதிர்பார்ப்பதாகவும் முதலமைச்சர் நஜீப் ஏ. மஜீத் கேட்டுக்கொண்டுள்ளார்.


## வாகை. . .

திருகோணமலை பொது வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இருபதுக்கும் மேற்பட்ட போலீசார் மற்றும் இடர் அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் சுமார் ஆறு மணி நேரம் மழையையும் பொருட்படுத்தாது வீதியின் குறுக்கே முறிந்து விழுந்த மரத்தை அப்புறப்படுத்தி... (கதிர்)

## குர்ஆன் மத்ரசாவிற்குப் . . . .

ஒரு கோடி ரூபா மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ளது. இந்த நிகழ்வில் திருக்கோணமலை மஸ்ஜிதுல் ஆளி ஜும்மா பள்ளிவாயலின் தலைவர் ஜனப் அல்ஹாஜ் யூசுப் அவர்களும், பள்ளிவாயலின் ஏனைய இமாம்களும், நூருல் ஹிதாய நிறுவன அமைப்பின் தலைவர் M.J.M.ஹசன்(தேசமானி), நிறுவன அமைப்பின்செயலாளர் அல்ஹாஜ் M.F.வலீத்(தேசசக்தி),மற்றும் நிறுவன அமைப்பின் முக்கிய உறுப்பினர்களும், நகரமுக்கியஸ்தர்கள், வியாபாரிகள், பொதுமக்கள் எனஅனைவரும் கலந்துகொண்டனர்.

(என்.இர்ஷாத்)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பயம்

அதிகமாகப் பயப்படும் போது எமது முகம் வெளுத்துப் போவதை பல தடவை உணர்ந்திருப்போம். அதற்குக் காரணம், பயப்படும் போது மூளையில் இருந்து இதயத்துக்குச் செல்லும் நரம்புகளில் இரத்த ஓட்டம் பாதிக்கப்படுகிறது. இதனால் முகத்தோலுக்கு அடியில் செல்லும் இரத்தக் குழாய்களில் இரத்தம் தடைப்படுகின்றது. இதுவே முகம் வெளுத்துக் காணப்படுவதற்கான காரணம் ஆகும்.



## படிப்போமா!

1. அதிகாலையில் எழுந்து படித்தால் அது மனதில் அழுத்தமாகப் பதியும். தினமும் அதிகாலையில் குறைந்தது இரண்டு மணி நேரம் படிப்பதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.

2. அமைதியான இடத்தில் வசதியாக அமர்ந்து படிக்க வேண்டும்.

3. படிப்பதை ஒரு முறை எழுதிப் பார்க்கலாம். இப்படி எழுதிப் பார்ப்பது மனதில் மிகவும் ஆழமாகப் பதிந்து விடும்.

4. அன்றைய பாடங்களை அன்றே திட்டமிட்டுப் படித்து விடுங்கள். நாளைப் பார்த்துக் கொள்ளலாம் என்பது பின்னால் சுமையாகிப் போய் விடும்.

5. விடுமுறை நாட்களில் அனைத்துப் பாடங்களையும் ஒரு முறை திருப்பிப் படித்துக் கொள்ள வேண்டும்.

6. நண்பர்களுடன் உரையாடும் போது பாடங்கள் குறித்து அதிகமாகப் பேச வேண்டும். நமக்குள் இருக்கும் சில சந்தேகங்கள் அகலலாம்.

குட்டிக் கதை

## இடுக்கணில் உதவுவோம்

சூரியன் முகில்களை விட்டு வெளியே வர நிமால் கட்டிலை விட்டு எழும்பினான். பூக்கள் மலர்ந்து நறுமணம் வீச பறவைகள் சங்கீதம் பாட நிமால் தன் காலைக் கடன்களை முடித்து விட்டு பாடசாலை செல்லத் தயாரானான்.

அம்மா நிமாலுக்குப் பிடித்த காலை உணவை தயார் செய்து கொடுத்தாள். அம்மா சமைத்த காலை சாப்பாடு மிக ருசியாய் இருந்தது நிமாலுக்கு. சாப்பிட்டு விட்டு நிமால் தன் பெற்றோரை வணங்கி, சீருடை அணிந்து பாடசாலை செல்ல தயாரானான்.

பூக்களின் மேல் இருந்த பனித்துளி, வீதியில் சென்றுகொண்டிருந்த வாகனங்கள் மற்றும் காலைக் காட்சியின் அற்புதங்களை ரசித்த படி சென்று கொண்டிருந்த நிமாலுக்கு மெல்லிய அனுங்கள் சத்தம் கேட்டது. "குக்.... குக்...". சத்தம் எங்கிருந்து வருகின்றது என தேடிப் பார்த்தான்.


நிமால் அருகிலிருந்த புதருக்குள் பால் வெள்ளை நிறத்தில் ஒரு நாய்க்குட்டி குளிரால் நடுங்கிக் கொண்டிருந்தது. அதைக் கண்ட நிமால் அந்த சின்ன நாய்க்குட்டியைத் தூக்கி வந்து தெருவில் வைத்தான். பின் தனது கைக்குட்டையால் நன்றாகத் துடைத்தான். பின் அம்மா தனக்குத் தந்த சாப்பாட்டை நாய்க்குட்டிக்கு வைத்தான் நிமால். நல்ல பசியிலிருந்த அந்த நாய்க்குட்டி சாப்பாடு முழுவதையும் சாப்பிட்டது. பின் நிமாலின் காலை நன்றியால் நக்கியது. நிமால் அந்த சின்னஞ்சிறு வெள்ளை நாய்க்குட்டியை மரநிழலில் இருத்தி விட்டு பாடசாலைக்குச் சென்றான்.

அங்கு பாடசாலை ஆரம்பமாகி விட்டது. நிமால் தாமதமாக வந்தமைக்கான காரணத்தை நிமாலின் ஆசிரியர் கேட்டார். "நிமால் ஏன் பாடசாலைக்குப் பிந்தி வந்தனீங்கள்?" என்று அதற்கு நிமால் தான் அந்த வெள்ளை நிற சின்ன நாய்க்குட்டிக்கு உதவி செய்ததை ஆசிரியைக்கு விளக்கமாகக் கூறினார். நிமால் சொன்ன கதையை ஆசிரியை பெருமிதத்துடன் கேட்டார். கேட்டு முடித்த பின் நிமாலின் மேல் கோபப்படாமல் அவன் செய்த நல்ல வேலையை ஏனைய மாணவர்களுக்குக் கூறினார்.

நிமாலுக்கு நாம் நிச்சயமாக பரிசு தர வேண்டும் என்றும் ஆசிரியை கூறினார். அதை மாணவர்கள் எல்லோரும் ஆமோதித்தனர். மறுநாள் அழகான சிறிய பரிசொன்றை ஆசிரியை கொண்டு வந்தார். "உதவி தேவைப்படுபவர்கள் யாராக இருப்பினும் தயங்காமல் அவர்களுக்கு உதவி செய்ய முன்வரவேண்டும்.

அவ்வாறு உதவி செய்பவர்களே நல்ல சிறுவர்களாகும். நல்ல சிறுவர்களையே எல்லோருக்கும் பிடிக்கும்'' எனக் கூறி நிமாலுக்கு அப்பரிசைக் கொடுத்தார்.

அப்பரிசு பலநிறப்படங்கள் கொண்ட அழகான ஒரு கதைப்புத்தகம். நிமால் தனக்குக் கிடைத்த பரிசை ஏனைய மாணவர்களுக்கும் காட்டினான். அனைத்து மாணவர்களும் தாங்கள் அனைவரும் உதவி தேவைப்படுபவர் யாராக இருப்பினும் உதவி செய்வோம் என்று ஆசிரியைக்கு கூறினார்கள்.




## உதட்டை அழகாக வைத்துக் கொள்ள விரும்புகிறீர்களா?

**உங்களுக்காக சில இலேசான வழி முறைகள் :**

♦ ரோஜா இதழ்களை நசுக்கி சாற்றை எடுத்து பூசி வர உதடுகள் சிவப்பாக மாறும்.

♦ ரோஜா இதழ்களை பால்விட்டு அரைத்து பூசி வந்தால் உதட்டு வெடிப்பு மாறும்.

♦ கிளிசரின் மற்றும் பன்னீர் கொண்ட கலவையை வெடிப்பின் மீது பூசி வந்தால் வெடிப்புக்கள் மறைந்து உதடுகள் மென்மையாகும்.

♦ பீட்ரூட்டை வெட்டி அதன் சாற்றை உதடுகளில் பூசி வர உதடுகள் சிவப்பழகு பெறும்.

♦ உதடுகளுக்கு வெண்ணெயைப் பூசி வர உதடுகள் குழந்தைகளின் உதடுகள் போல் மிக மென்மையாகும்.

♦ கொத்தமல்லிச் சாற்றை இரவில் பூசி வர உதட்டின் கறுப்பு நிறம் மாறும்.



♦ பாலாடையை உதட்டில் பூசி வருவீர்களானால் உதட்டில் ஏற்படும் வெடிப்பு மற்றும் வரட்சியை இல்லாமலாக்கலாம்.

♦ உதடுகள் பொலிவுற சந்தனத்தை பன்னீரில் குழைத்துப் பூசி வரலாம்.

♦ உதடுகளை சிவப்பாக மாற்ற நில ஆவாரை, எலுமிச்சை சாறு இரண்டையும் கலந்து தடவி வந்தால் உடனடி மாற்றத்தை காணலாம்.

கிறிஸ்மஸ் ஸ்பெசஷல்

## றிச் கேக்கின் மேல் இடப்படும் ஆமெண்ட் ஐசிங்

200 கேக் துண்டுகளுக்குப் போதுமான அளவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

**தேவையான பொருட்கள் :** ஐசிங் சீனி - 400 கிராம், முந்திரிகைப் பருப்பு (கஜு) - 200 கிராம், ஆமென்ட் எசென்ஸ் - 1 தே.கரண்டி, முட்டை வெண்கரு - அளவாக



**செய்முறை :** முதலில் முந்திரிப் பருப்பைச் சுத்தமாக்கி மாவாக அரைத்துக் கொள்ளவும். பின் அரைத்த முந்திரிப்பருப்புடன் ஐசிங் சீனி, எசென்ஸ் இவற்றைக் கலந்து பிசைந்து கொள்ளவும். இடையிடையே முட்டை வெண்கருவையும் சிறிது சிறிதாகச் சேர்த்துப் பசைத் தன்மையாக வரும் வரை பிசைந்து திரணையாக்கிக் கொள்ளவும். அதன் பின்பு அதனைச் சிறு உருண்டைகளாக்கிப் பலகையில் வைத்து மிக மெல்லிய தடிப்பமுள்ளதாக உருட்டிக் கொள்ளவும். பின்பு துண்டுகளாக்குவதற்கு உரிய கட்டமிடப்பட்ட கேக் தட்டை உருட்டப்பட்ட ஐசிங்கின் மேல் (பலகையின் மேல்) வைத்து அமர்த்திக் கொள்ளவும். ஒவ்வொரு கட்டங்களுக்குள்ளும் உதிர்த்தி வைக்கப்பட்ட கேக்கை இட்டு அமர்த்தி அழுத்தமாக்கவும். இறுதியாகப் பலகையைக் கவிழ்த்து கேக் த டை வேறாக்கவும். கட்டங்களுககுள் அமர்த்தப்பட்ட கேக் துண்டுகளைத் தனித்தனியாக எடுத்துக் கொள்ளவும்.

## குளிர் காலத்தில் வரள்கிறதா? சருமம்

இந்த குளிர் காலத்தில் பல்ருக்கு உடம்பு முழுவதுமே வறண்டு காணப்படும். அதிலும் இயற்கையிலேயே வறண்ட சருமம் உடையவர்களுக்கு கேட்கவே வேண்டாம்.. முகம் அதிக அளவில் வறண்டு போய்விடுவதால், ஒருவித அசௌகரியத்தை அவர்கள் உணர்வார்கள்.

இத்தகையவர்களுக்காகவே கைகொடுக்கிறது ஆரஞ்சு பழமும், தேனும். வறண்ட சருமம் உடையவர்கள் மட்டுமல்லாது எண்ணெய் வடியும் முகத்தை கொண்டவர்களுக்கும் இந்த இரண்டும் அற்புத மாற்றத்தை ஏற்படுத்தி விடும். ஆரஞ்சு இந்த குளிர் சீசனில் அதிகமாகவே சந்தைகளில் கிடைக்கும்.

வைட்டமின் ஏ மற்றும் சி சத்துக்கள் அதிகம் நிறைந்த இந்த பழத்தை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், மேனி மினு மினுப்படைவது உத்தரவாதமான ஒன்று என்கிறார்கள் அழகுக் கலை நிபுணர்களும், டயட்டீசன்களும்.

பொதுவாக மேனி வறண்டுபோகாமல் இருக்க வழக்கமாக கூறப்படும் ஆலோசனை, அதிக அளவில் தண்ணீர் அருந்துவது. அது ஒரு வகையில் பலனளிக்கும் என்றாலும், ஆரஞ்சு மற்றும் தேன் ஆகியவை புரியும் மாயஜாலம் அதி அற்புதமானவை என்கிறார்கள் நிபுணர்கள்.

ஆரஞ்சு பழ சுளைகளை உண்டுவிட்டு அதன் தோலை தூக்கி எறிந்துவிடாமல், அதனை காயவைத்து பவுடராக்கி தண்ணீருடன் குழைத்து முகம் மற்றும் கைகளில் தடவி, சிறிது நேரம் கழித்து கழுவினால் வறண்ட சருமம் போயே போச்சு!

அதேப்போன்று அரை மூடி எழுமிச்சை பழச்சாறில் ஒரு டம்ளர் சுடு நீரை கலந்து, அதனுடன் ஓரிரு ஸ்பூன் தேனை கலந்து காலையில் வெறும் வயிற்றில் குடித்து வந்தால், மேனி மினு மினுப்படைவதோடு, உடம்பில் உள்ள தேவையற்ற சதைகள் குறைந்து உடம்பும் -சிக்- கென்று இருக்கும்.

எண்ணெய் சருமம் உடையவர்கள் ரோஸ் வாட்டரை ஒரு பஞ்சில் நனைத்து தடவ, சருமம் மினு மினுக்கும்.

தோலில் தழும்புகள், கீறல் வடுக்கள் போன்றவை உள்ளவர்கள் தக்காளி பழக்கூழுடன், தயிர் கலந்து தடவி சிறிது நேரம் காயவிட்டு, பின் கழுவி வர தழும்புகள் மறையும்.

மக்காச்சோள மாவு மற்றும் தயிர் கலந்த கலவையை தினசரி உடம்பில் தடவி, காயவிட்டு பின்பு குளித்து வர சருமம் மின்னுவது சர்வ நிச்சயம் என்கிறார்கள் அழகு கலை நிபுணர்கள்.

இவையெல்லாவற்றையும் விட வெளியில் செல்லும்போது வெயில் படாமல் இருக்க கையில் குடை எடுத்து சென்றால் சூரிய கதிர்களின் வெப்பத்தினால் சருமம் வறண்டு போவதை தடுக்க முடியும்.

மேற்கூறியவற்றில் உங்களுக்கு வசதியானவற்றை பின்பற்ற ஒரு சில நிமிடங்கள்தான் தேவை. அதை செய்தால் பளபளக்கும் மேனியை நிச்சயம் பெறலாம்.

(சுதன்)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## The Sunday Times:

### பிரதம நீதியரசருக்கெதிரான குற்றச்சாட்டுக்களில் ஒன்றை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு நிரூபிக்க முயற்சி.

பிரதம நீதியரசருக்கெதிராக எழுப்பப்பட்ட சொத்துக் கொள்வனவு குற்றச்சாட்டை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரிக்கத் தொடங்கியிருப்பதுடன் பிரதம நீதியரசரின் கணவர் நாட்டை விட்டு வெளியேற தடையும் விதித்துள்ளது. இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவானது வரலாற்றில், பணியில் உள்ள பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டை விசாரிக்கும் பணி இம்முறையே முதல் தடவையாக நிகழ்வதாக தெரிவிக்கிறது.

### இலங்கைக்கான கடன்களுக்கும் நிதியுதவிக்கும் நிபந்தனைகளை கடினமாக்கியுள்ளது சீனா.

சீன அரசுக்குச் சொந்தமான காப்புறுதி கம்பனிக்கு 627 மில்லியன் ரூபாய்களுக்கு மேற்பட்ட தொகையை செலுத்தினால் மட்டுமே 8.9 பில்லியன் ரூபா பெறுமதியான நீர்மின் சக்தித் திட்டத்திற்கான கடனை வழங்கமுடியுமென நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசினால் வழங்கப்பட்டுள்ள உத்தரவாதத்தைக் கூட பொருட்படுத்தாமல் சீன அரசுக்குச் சொந்தமான நிதிநிறுவனங்களின் இவ்வகை நடவடிக்கையானது சீனா தனது நிதியிடல் மீது எவ்வகை பாதுகாப்பு பொறிமுறையைக் கொண்டுள்ளது என்பதை வெளிக்காட்டியுள்ளது.

சீனாவின் தேசிய மின்சக்தி உபகரண கூட்டமைப்பானது இலங்கைக்கு 69,723,605.35 அமெரிக்க டொலர்களை சீனாவின் தொழிற்துறை வர்த்தக வங்கியூடாக வழங்க முன்வந்திருந்தது. இத்தொகையில் 85 வீதமானது வலுத்திட்டங்களுக்கானது. இலங்கை மின்சார சபையின் கூற்றுப்படி களனி கங்கையிலிருந்து மின்வலுவைப் பெற்றுக்கொள்வதற்கான திட்டத்தில் முதலீடு செய்யப்பட இருந்தது. மேற்கூறப்பட்ட தொகையை விடுவிக்க வேண்டுமாயின் அத்தொகையின் 7 வீதத்தை அதாவது 48 மில்லியன் அமெரிக்க டொலர்களை அல்லது 627 மில்லியன் ரூபாய்களை காப்புறுதியாக இலங்கை, சீனாவின் மற்றொரு காப்புறுதி நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டும் எனும் நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. இவ்விடயம் தொடர்பாக மின்வலுத்துறை அமைச்சர் சம்பிக ரணவக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

### புதுவருடத்தில் பிறக்கவுள்ள திவிநெகும சட்டமூலம்

எதிர்ப்பைச் சம்பாதித்துள்ள திவிநெகும சட்டமூலம் புதுவருடத்தின் பின் ஜனவரி 8 ந் திகதி கூடவுள்ள பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படும் எனும் செய்திகள் வெளியாகியுள்ளன.

மீயுயர் நீதிமன்றத்தின் பணிப்பிற்கமைய பல புதிய திருத்தங்களை திவிநெகும சட்டமூலம் உள்ளடக்கியுள்ளதாக பிரதி பொருளாதார அமைச்சர் தெரிவித்தார். இச்சட்ட மூலம் தொடர்பாக நீண்ட உரையொன்றை பொருளாதார அமைச்சர் பாராளுமன்றத்தில் ஆற்றவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நட்டமே பெற்றோல் விலையுயர்வுக்குக் காரணம

பெற்றோல் விலை ரூபா 10 இனால் அதிகரிக்கப்பட்டமைக்கான காரணம் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அடைந்துள்ள நட்டமே என பெற்றோலிய தொழிற்துறை அமைச்சர் தெரிவித்தார். இதுவரை காலமும் ஏற்பட்ட நட்டத்தினால் வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களுக்கு பெருமளவு வட்டி செலுத்த வேண்டியிருப்பதால் தாம் பெற்றோலின் விலையை அதிகரிப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டதாக தெரிவித்தார்.

மின்சார சபைக்கு வழங்கிவரும் பெற்றோலியத்தின் மீதும் விலைகள் அதிகரிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைப் பணிப்பாளரின் கூற்றுப்படி மண்ணெண்ணை, டீசல் மற்றும் 95 ஒக்டென் பெற்றோலின் விலை அதிகரிக்கவில்லை என தெரிவித்தார். இவற்றின் விலை அதிகரிப்பால் இலங்கையின் பொருளாதாரம் பாதிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

## The Sunday observer:

### புதிய தேர்தல் முறைக்கான முன்னெடுப்புக்கள் ஆரம்பம்

உள்ளூர் அதிகார சபைக்கான எதிர்காலத் தேர்தல்களில் புதிய நடைமுறைகளை பின்பற்றுவதற்கான திட்டங்களை மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைப்பு மேற்கொள்கின்றது. இதனடிப்படையில் தேசிய மற்றும் மாவட்ட மட்ட எல்லை நிர்ணயக் குழுக்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளன. அவை உள்ளூர் அதிகார சபைகளுக்குரிய நிலப்பிரதேசங்களை தொகுதிகளாகப் பிரித்து அவற்றிற்கு இலக்கமிடுதலையும், பெயரிடுதலையும் மேற்கொள்ள தொடங்கியுள்ளன. தேசிய மற்றும் மாவட்ட எல்லை நிர்ணயக் குழுக்கள் பதிவு செய்யப்பட்ட அரசியற் கட்சிகளிடமிருந்து இத்தொகுதிப்பிரிப்பு சம்பந்தமான கருத்துக்களைப் பெற்றுக்கொண்டு செயற்படத் துவங்கும்.

அத்துடன் நிறுவனங்கள் மற்றும் விருப்புடைய நபர்களிடமிருந்தும் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ள இவ் எல்லை நிர்ணயக் குழுவானது ஜனவரி மாதம் 31ந் திகதி வரை முயற்சிக்கும். இக்குழுக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் இறுதி அறிக்கைக்கான திகதி 31ந் திகதி மே மாதம், 2013 ஆகும். இலங்கை தேசிய மட்ட எல்லை நிர்ணயக் குழுவின் முதல்வராக ஜயலத். ஆர். வீ. திசநாயக்கவும் அங்கத்தவர்களாக P.G.H.பிரேமசிறி, விமல் றூபசிங்க, A.M.நகியா, தேவராஜ் ஆதவன் ஆகியோர் அடங்கியுள்ளனர். மாவட்ட மட்ட எல்லை நிர்ணயக் குழுக்களின் முதல்வர்களாக அந்தந்த மாவட்டத்தின் செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதனடிப்படையில் தேசிய மட்ட எல்லை நிர்ணயக் குழுவிற்கு ஆலோசனை வழங்குவதற்கு 25 மாவட்ட மட்டக் குழுக்கள் உருவாக்கப்படவுள்ளன. எல்லைகள் நிர்ணயம் செய்யப்பட்ட பிறகு சனாதிபதி மற்றும் அமைச்சின் அனுமதியுடன் வர்த்தமானியில் இவ் எல்லை நிர்ணயம் பதிவாகும்.

### இரட்டை நாட்டு குடியுரிமை முறைமையின் திருத்தம் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது.

இரட்டை நாட்டு குடியுரிமை பெறுவதில் உள்ள சட்டச்சிக்கல்களின் காரணமாக இரட்டை நாட்டு குடியுரிமைத் திட்ட முறைமை கடந்த மூன்று மாதங்களாக கிடப்பில் போடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் முரண்பாட்டைத் தோற்றுவிக்கின்ற இரு சட்டங்களாக குடியுரிமைச் சட்டமும் குடிவரவு, குடியகழ்வுச் சட்டமும் காணப்படுகின்றது என குடிவரவு குடியகழ்வு ஆணையாளர் தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக உரிய அலுவலகர்கள் கோத்தபாயவைச் சந்தித்துள்ளனர். இரட்டை நாட்டு குடியுரிமை தொடர்பான முரண்பாடுகள் காணப்பட்டதால் கடந்த 2011 பெப்ரவரியிலிருந்து இத்திட்டம் செயற்படுத்தப்படாமலேயே இருந்தது.

தற்போது முன்மொழியப்பட்டுள்ள திட்டத்தின் படி இரட்டைக் குடியுரிமை தேவைப்படுபவர்களின் பின்புலம், எண்ணங்கள், தற்போதய நிலை போன்றவை ஆழமாக ஆராயப்பட்ட பின்னர் 5 வருடங்களுக்கான நிரந்தர வதிவிட அனுமதி வழங்கப்பட்டு பின்னரே குடியுரிமை வழங்கப்படவுள்ளது.

### அரசியலமைப்புச் சட்டத்தின் படி குற்றப்பிரேரணை சரியானது.

அரசாங்கம் முன்னெடுத்துள்ள குற்றப்பிரேரணையும் அதனைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவின் அமர்வுகளும் அரசியலமைப்புச் சட்டத்தின் படி சரியானது என பிரபல்ய அரசியலமைப்பு மற்றும் சனாதிபதியின் சட்டத்தரணியுமான K.N.சொக்ஸி தெரிவித்தார். அரசியலமைப்புச் சட்டமானது தனது பகுதி ஒன்றை சட்டத்துறையின் சுதந்திரத்தன்மைக்காக ஒதுக்கியுள்ளமையானது, இலங்கையில் சட்டம் நிலவுவதை உறுதி செய்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

### இலங்கையுடன் தொடர்புகளை வலுப்படுத்த விரும்பும் ஈரான்

இலங்கையுடனான உறவை பல்வேறு துறைகளிலும் வலுப்படுத்த ஈரான் கொண்டுள்ள விருப்பத்தை அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் அலி அக்பர் சலாகி தெரிவித்துள்ளார். ஈரானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள தொழிற்துறை வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீயுடன் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இச்சந்திப்பில் இலங்கை அமைச்சர் ஈரானின் உறவுகளைப் பாராட்டியதுடன் அவ்வுறவுகளை மேலும் வலுப்படுத்தவும் கோரினார்.

## The Sunday Leader

### 200 மில்லியன் வருமானத்தை கொண்டோடியது கொழும்பின் இரவுக் காரோட்டம்.

கடந்த வாரம் கொழும்பில் நிகழ்ந்த இரவுக் காரோட்டத்திற்கான இறக்குமதியில் இலங்கை 200 மில்லியன் ரூபா வருமானத்தை இழந்துள்ளது. கால்டன் மோட்டார் விளையாட்டுக் கழகத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட 19 கார்கள் தொடர்பாக திறைசேரிக்குக் கிடைக்கவேண்டிய 200 மில்லியன் ரூபா இழக்கப்பட்டுள்ளது. இக்கார்களின் இறக்குமதிகளின் போது பின்பற்றப்பட்டதாகக் கூறப்படும் விசேட அனுமதி, தற்காலிக இறக்குமதி வசதி மற்றும் மீள் ஏற்றுமதித் திட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் இறக்குமதி வரிகள் எவையும் செலுத்தப்படாமல் இப் பத்தொன்பது கார்களும் இலங்கைக்கு வந்தடைந்துள்ளன.

இக்கார் இறக்குமதிக்கு வெறுமனே சுங்கக்கட்டணம் மட்டுமே செலுத்தப்பட்டுள்ளது. இக்கார்கள் மீள் ஏற்றுமதி செய்யப்படுமா? என்பது தெளிவற்றே இருக்கின்றது. ஏனெனில் இக்கார்கள் சிலவற்றின் இறக்குமதி ஆவணங்களில் மீள் ஏற்றுமதி தொடர்பாக எதுவும் குறிப்பிடப்படாமை ஆகும். அத்துடன் விசேட திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட கார்கள் அத்திட்டத்தை மேலும் சில காலங்களுக்கு நீடிப்பதன் ஊடாக இலங்கையிலேயே வைத்திருப்பதற்கான வாய்ப்பைக் கொண்டிருக்கின்றன.

### புலிகளுடன் உள்ள தொடர்பால் யாழ்ப்பாணத்தில் மேலும் சிலர் கைதாகலாம்.

ஏற்கனவே 37 பொதுமக்கள் புலிகளுடன் தொடர்பிலுள்ளார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டு யாழ்ப்பாண காவல் துறையால் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்தப்பட்டு தண்டிக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் பலர் இவ்விடயம் தொடர்பாக கைதாக்லாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன. கைது செய்யப்பட்ட 33 சந்தேக நபர்களின் குடும்பங்கள் யாழ்ப்பாண மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடுகளை பதிந்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் மேற்கொள்ளப்பட்ட கைதுகளுக்கான காரணம் தெளிவற்றுள்ளதாக தெரிவித்துள்ளார். எனினும் கைது செய்யப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கைது விளக்கக் குறிப்பில் அவர்கள் விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையதாக இருந்துள்ளதுடன் புனர்வாழ்வுக்கு தம்மை உட்படுத்தவில்லை என்றும் காரணம் குறிப்பிடப்பட்டுள்ளது மேலும் கைது செய்யப்பட்வர்கள் உடனடியாக வவுனியா, வெலிகந்த மற்றும் ஏனைய பிரதேசங்களிலுள்ள தடுப்புக்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

காவல்துறை ஊடகப் பேச்சாளர் கைது செய்யப்பட்டவர்கள் கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளுடன் தொடர்பில் இருந்தவர்கள் என்று தெரிவித்தார். அத்துடன் அவர்கள் தொடர்பான தகவல்களை நீண்ட காலமாக திரட்டி வந்ததாகவும் அதனடிப்படையிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார். அத்துடன் இவ்வாறான தொடர்புகளைக் கொண்ட மேலும் பலர் எதிர்வரும் காலங்களில் கைது செய்யப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### அரசின் மீது மேலதிக அழுத்தங்களை உருவாக்கும் பிரதம நீதியரசருக்கெதிரான குற்றப்பிரேரணை

பிரதம நீதியரசருக்கு எதிரான பாராளுமன்ற தெரிவுக் குழுவின் அறிக்கையைப் பெற்றுக்கொண்டுள்ள சனாதிபதி அவ்வறிக்கையின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மற்றொரு சுதந்திர ஆலோசனைக் குழுவை நியமிக்கவுள்ளதாகவும் இச் சுதந்திர ஆணைக்குழு அறிக்கையினை மீள் பார்வைக்கு உட்படுத்தி எடுக்கவேண்டிய எதிர்கால நடவடிக்கை என்ன என்பதை சனாதிபதிக்கு தெரியப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். எனினும் இம்முடிவை சர்வதேச நீதியாளர்கள் சங்கம் விமர்சனத்திற்குட்படுத்தியுள்ளது. சமயாசமய குழுக்களை உருவாக்கி ஒரு நீதியரசருக்கெதிரான விசாரணையை மேற்கொள்வது நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதிக்கும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் கொமன் வெல்த் செயலாளர் நாயகமும் வெளிவிவகார அமைச்சருடன் தொலைபேசியிருந்தது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் விளையாட்டு செய்திகள்


## திருமலை மாவட்ட மெய்வல்லுனர் சம்மேளனத்தின் ௨0௧௨–௨0௧3ம் ஆண்டுக்கான பொதுக்கூட்டம்

திருக்கோணமலை மாவட்ட மெய்வல்லுனர் சம்மேளனத்தின் ௨0௧௨ - ௨0௧3ம் ஆண்டுக்கான பொதுக்கூட்டம் ௧6.௧௨.௨0௧௨ல் மக் ஹெய்ஸர் விளையாட்டுத் திடலின் உள்ளக அரங்கில் நிகழ்ந்துள்ளது.

திருக்கோணமலை மாவட்ட மெய்வல்லுனர் சங்கத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள விளையாட்டுக் கழகங்களின் உறுப்பினர்களுடன் நிகழ்ந்த இப் பொதுக் கூட்டத்தில் இலங்கையின் தங்க வீராங்கனையான சுசந்திகா ஜெயசிங்க தலைவராக அனைவராலும் தெரிவு செய்யப்பட்டதுடன் விளையாட்டு அலுவலரும், விளையாட்டுத் துறைப் பட்டதாரியுமான திரு. எஸ். விஜயநீதன் செயலாளராகவும் தெரிவானார்கள். உதவிச் செயலாளராக மற்றொரு விளையாட்டு அலுவலர் க. உமாசுதன் தேர்வானார்.

சங்கத்தின் இப்பருவ காலத்துக்கான அங்கத்தவர்களாக ஜோன்பிள்ளை, இசோக், ஹாரிஸ், பண்டார, தவநேசன், அபெயநாயக, ஜெயசுகாசினி, நிசாந்தினி ஆகியோர் தேர்வாகினர்.

சங்கத்தின் பொருளாளராக ஏ.டபிள்யு.எம். பசித் தெரிவானதுடன் பிரதித் தலைவர்களாக எம்.சிஎம். ஆதீக், ஏ.எச்.எம் அக்மல், ஏ.எச். விமலசேன ஆகியோர் தேர்வுசெய்யப்பட்டுள்ளனர். பொதுக்கூட்டத்திற்கான விசேட அவதானிப்பாளர்களாக இலங்கை மெய்வல்லுனர் சம்மேளன உதவித்தலைவர் சுனில் ஜெயவீரவும், உதவிச் செயலாளர் பேர்னாட் பெரேராவும் கலந்து சிறப்பித்திருந்தனர். (கஜன்)



### வீதி விபத்து

13.12.2012அன்று காலை 10.30 மணியளவில் தெருவிருத்திப் பணியாளர் ஒருவரால் அபயபுர சந்தியில் வாகனங்கள் நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது.

இவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு முச்சக்கர வண்டி மீது முச்சக்கர வண்டிக்குப் பின்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கணம் பொருந்திய வாகனம் ஒன்று மோதி முச்சக்கர வண்டிக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்து வண்டியுடன் கொண்டு மோதியது. முச்சக்கர வண்டிக்குள் இருந்த சாரதி தனது அறிவினை பயன்படுத்தி முச்சக்கர வண்டியினை விட்டு வெளியே பாய்ந்து தனது உயிரினை காப்பாற்றிக் கொண்டார் (ரெ. ரொசான்)



### புளியங்குளத்தில் வழிப்பறி முயற்சி

கடந்த 18.12.2012 அன்று யுவதி ஒருவர் புளியங்குளப்பகுதியில் உள்ள கடை ஒன்றில் பணியாற்றி விட்டு வீடு சென்று கொண்டிருக்கும் போது அவரது கழுத்திலிருந்த தங்க சங்கிலியை திருடன் ஒருவன் பறிக்க முயன்றுள்ளான்.

தான் அன்று இரவு 7.30மணியளவில் பணிமுடிந்து துவிச்சக்கர வண்டியில் வீடு சென்று கொண்டிருந்த போது தன் பின்னால் ஓடிவந்த ஒருவர் தன்னை தள்ளி விட்டு சங்கிலியை அறுக்கமுற்பட்டதாகவும் தான் உடனடியாக தன் கையிலிருந்த குடையால் அவரை அடித்ததுடன் சத்தம் எழுப்பியதால் அயலவர்கள் ஓடிவர அவன் ஓடித்தப்பிவிட்டதாகவும் குறித்த யுவதி மலை முரசிற்கு தெரிவித்தார்.

நிலாவெளி வீதிப்பகுதியில் கடந்த சில காலமாக வழிப்பறிகள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (பிரஷன்)

வியாபாரம் பெருக்க விளம்பரம் செய்யுங்கள். வர்ண விளம்பரங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்

மலைமுரசு பத்திரிகையின் அலுவலக விநியோகத்தர்கள் – திருமலை நகர லியோ கழகத்தினர்

The official distributor of Malaimurasu is Leo club of Trincomalee Town

## சவூதி அரேபியாவில் தன்னை மாய்த்துக் கொண்ட திருமலைப் பெண்

[07ம் பக்கத் தொடர்ச்சி]

தான் அதற்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டதாகவும் அவர் இறந்த பின் அது தொடர்பான பதில் கூறும் பொறுப்புக்களை அவர்கள் தட்டிக் கழித்ததாகவும் இதுபோன்று அலட்சிய போக்கில் இவர்கள் இருப்பதற்கு காரணம் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட பல வெளிநாட்டு வேலை வாய்ப்பு (ஏஜென்சி) நிறுவனங்கள் தங்களுடைய சிறு பிரிவாக செயற்படுத்தும் பதில் முகவர்களுக்கு (சப் ஏஜென்ட்) வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவுகளை மேற்கொள்ள தவறுவதே ஆகும். இவ்வாறு ஏற்படும் சிறு சிறு குறைப்பாடுகளால் பதில் கூறும் பொறுப்புகளை அவர்கள் ஏற்க மறுப்பதாகவும் இது போன்ற செயல் இனி வேறு யாருக்கும் நடக்காமல் தடுப்பதற்கு ஏதாவது ஒரு வகையில் அரசாங்கமோ அல்லது சமூக அக்கறை கொண்டவர்கள் யாராவது அதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என தன் மன ஆதங்கத்தை கூறிமுடித்தார். இப்பிரச்சனையை தனிப்பட்ட ஒரு பெண்ணின் பிரச்சினையாக பார்க்காமல் சமூக பிரச்சினையாக பார்ப்பமேயானால் இதில் நாம் கவனிக்க வேண்டிய பல விடயங்கள் நம் கண்ணுக்கு புலப்படாமல் ஒளிந்து கிடக்கிறது. சமூக மட்டங்களில் இன்னமும் துன்புறுத்தப்படும், ஏமாற்றப்படும், அவதிக்கப்படும் பெண்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள். இவர்கள் எல்லோருமே இந்த அநீதிகளை எதிர்த்து போராட முன் வருகின்றார்களா என்றால் இல்லை என்றே சொல்ல முடியும். பெண்கள் பல கோணங்களில் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றனர். பெண்ணின் வாழ்க்கையின் ஒவ்வொரு பாதையும் பயங்கரமானதாக கரடு முரடானதாகவே பெரும்பாலும் இருக்கின்றது. இன்று பெண் தன்னுடைய உரிமைகளை நிலைநாட்டவும் ஆற்றல்களை வெளிப்படுத்தவும் பல வழிகள் இருக்கின்றன. எமக்கு முந்தைய சந்ததியினரைப் போல பெண்கள் ஏக்கம் நிறைந்தவர்களாகவோ இன்னொருவரில் தங்கியிருக்க வேண்டியவர்களாகவோ இருக்க வேண்டிய நிர்ப்பந்தங்கள் அருகிவிட்டன. பாதைகள் பல முனைகளில் திறந்திருக்கின்றன. இருந்தும், எத்தனை பேர் தமக்கு ஏற்படும் அநீதிகளுக்கு எதிராக கிளர்ந்து எழுகிறார்கள் என்பது கேள்விக் குறியாகவே இருக்கின்றது.

ஏதோ ஒரு விதத்தில் ஏற்படும் பயமும், தயக்கமும் அநீதிக்குட்பட்டவர்களின் உணர்வுகளை மரக்கச் செய்து விடுகின்றன அல்லது மௌனிக்க வைத்து விடுகின்றன என்றே சொல்ல வேண்டும். உண்மையில் எப்பொழுதும் அநீதி இழைப்பவர்கள் தான் அச்சமுறவேண்டும் ஆனால் இங்கே மாறாக அநீதிக்குட்படுபவர்களே அச்சமுறுகின்றார்கள். காலங்காலமாய் பெண் இப்படித்தான் இருப்பதற்குப் பழக்கப் பட்டிருக்கின்றாள். அநீதிக்கெதிராககுரல் கொடுப்பது அல்லது நடவடிக்கை எடுப்பது என்பது பெண்ணுக்கு அவமானம், களங்கம் என்று அன்றைய காலம் போதித்தது. ஆகவே அன்றைய பெண் எப்படி வாழ்ந்தாள் என்ற கருத்தும், ஆழமான வழி நடத்தலும் இன்றும் சில இடங்களில் ஊறி இருப்பதை நாம் காண்கின்றோம். இவை களையப்பட வேண்டிய கருத்துக்களாக இருக்கின்றன. அநீதிகளுக்கு எதிராக துணியாதவர்களும் இருக்கவே செய்கின்றார்கள். சட்டம் தெரியாதவர்கள் என்பவர்களைவிட சட்டம்பற்றி முழுமையான தெளிவிருந்தும் முன்வராதவர்கள் தான் அதிகம் ஏன் இவர்கள் இப்படி ஒதுங்கிப் போய்விடுகின்றார்கள் என்று ஆராய்ந்து பார்த்தால் அவமானம் எதிர்காலம் பாதிக்கப்படும் என்ற பயம் என்ன செய்வது பெண் என்றால் இதெல்லாம் சகஜம் என நினைக்கும் மனோபாவம் என்பவையே காரணங்களாக அமைகின்றதை அறிய முடிகின்றது. இதன் மூலம் அநீதி இழைப்பவர்கள் தப்பிக் கொள்ள பாதிக்கப்பட்டவர்கள் மன உளைச்சலுடனும், மாற முடியாத துன்பத்துடனும் வாழ நேரிடுகிறது. மேலும், அநீதி இழைப்பவர்கள் மீண்டும் மீண்டும் இதே அநீதியை செய்து கொண்டே இருக்கிறார்கள். தவறு செய்வது மட்டுமல்ல, தவறு செய்யப்படுவதை வெறுமனே அனுமதித்திருப்பதும் மாபெரும் தவறாகிறது. தவறிழைப்பவர்களை மன்னித்துவிடுகிறோம். அல்லது அலட்சியம் செய்துவிடுகின்றோம். இதனால் தவறிழைப்பவர்கள் மனச்சாட்சியின் உறுத்தலால் திருந்திக் கொள்வார்கள் என்பது எல்லாம் முழுமையான உண்மையல்ல. ஆகவே பெண்கள் தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக கிளர்ந்தெழ வேண்டியது, போராட வேண்டியது இன்றைய கால கட்டத்தின் தேவையாகிறது.

இந்தக் கிளர்ச்சி அல்லது போராடும் மனப்பான்மை தான் சமூகத்தில் பெண்களின் முன்னேற்றத்திற்கு விதையாக அமையும்.

(லியோ சுதன்)

## உலகம் அழியும் என்ற நம்பிக்கையில் . . .

- திருககோணமலையில் அலுவலகங்களுக்கு வருகை தந்த அலுவலர்களின் எண்ணிக்கை குறைவாயிருந்தது. பிள்ளைகளுடன் தமது கடைசி நிமிடங்களைக் கழிக்க அவர்கள் விரும்பியிருந்தனர்
- திருக்கோணமலையில் வங்கிகளிலிருந்து பணம் எடுத்துச் செலவினை மேற்கொண்டவர்கள் பெருமளவில் காணப்பட்டனர். தனியார் வங்கிகளிலிருந்து பணத்தை மீளப் பெற்றுக் கொண்டவர்கள் அதிகமானவர்களாக காணப்பட்டனர்
- சந்தோசமான மாயன் நாள் என குறுஞ்செய்திகள் பரிமாறப்பட்டிருந்தன. பெருந்தெருக்களில் நடமாட்டம் மிகக் குறைவாகவே இருந்தது. கடை உரிமையாளர்கள் பலரைக் கடைகளின் முன்றலில் காணக்கிடைத்தது.
- திருக்கோணமலை உவர்மலையில் மெழுகுதிரிகள் விற்றுத் தீர்ந்தன. தனது வியாபார வரலாற்றில் இவ்வளவு தொகை மெழுகுதிரிகளை விற்கவில்லை என்று விற்பனையாளர் ஒருவர் தெரிவித்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் திருக்கோணமலை வித்தியாலயம் வீதியில் 58ம் இலக்கத்திலுள்ள எஸ். எஸ். டிஜிட்டல்ஸ் இல் 23 12. 2012ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.